முடிவெடு ! முயன்றிடு !! முன்னேறிடு !!!

# 12

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# வரலாறு

**2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற முழு ஆண்டுப் பொதுத் தேர்வு மற்றும் உடனடித் தேர்வுகளின் வினாக்கள் & அரசு வழங்கிய விடைக் குறிப்புகளின் தொகுப்பு**

## ஒருங்கிணைப்பாளர்

**திரு. பெ. சுரேஷ் M.A., B. Ed., M.Phil., (வரலாறு)**
தலைமை ஆசிரியர்,
அ.மே.நி.பள்ளி – தேவியாக்குறிச்சி.,
தலைவாசல் (வட்டம்), சேலம் (மாவட்டம்)

## தொகுப்பாளர்கள்

**திரு. அ. ஜாபர் அலி M.A., B. Ed.,**
முதுநிலை ஆசிரியர் (வரலாறு)
அ.ஆ.மே.நி.பள்ளி – ஆத்தூர் (வட்டம்)
சேலம் (மாவட்டம்)

**திரு. பெ. பாலமுருகன் M.A., B. Ed., M.Phil.,**
முதுநிலை ஆசிரியர் (வரலாறு)
அ.மே.நி.பள்ளி – தாண்டவராயபுரம்,
ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்)

**குறிப்பு :** இது அரசுப் பொதுத் தேர்வுகளின் வினா – விடைத் தொகுப்பு மட்டுமே.
மாணவ – மாணவியர் நூற்றுக்கு நூறு ( சென்டம்) பெற விரும்பினால் பாடப் புத்தகத்தில் உள்ள அனைத்து வினா – விடைகளையும் முழுவதுமாக படித்து பயிற்சி பெற வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு**

**வரலாறு**

**பொதுத் தேர்வு வினா – விடைத் தொகுப்பு ( 2020 – 2024 )**

---

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார் ?
   (அ) 1917 **(ஆ) 1915** (இ) 1918 (ஈ) 1916
2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ?
   (அ) 1855 (ஆ) 1825 **(இ) 1835** (ஈ) 1845
3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
   (அ) வில்லியம் ஜோன்ஸ் (ஆ) சார்லஸ் வில்கின்ஸ் (இ) மாக்ஸ் முல்லர் **(ஈ) அரவிந்த கோஷ்**
4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" – எனக் கூறியவர்
   (அ) சுபாஷ் சந்திர போஸ் **(ஆ) பால கங்காதர திலகர்** (இ) பாரதியார் (ஈ) தாதாபாய் நௌரோஜி
5. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான காலவரிசையைத் தேர்வு செய்க
   (i) கிழக்கிந்தியக் கழகம் (ii) சென்னை மகாஜன சங்கம் (iii) சென்னைவாசிகள் சங்கம் (iv) இந்தியச் சங்கம்
   **(அ) (iii), (iv), (i), (ii)** (ஆ) (ii), (i), (iii), (iv) (இ) (iii), (iv), (ii), (i) (ஈ) (ii), (iii), (i), (iv)
6. இந்திய தேசிய காங்கிரசை நிறுவியவர்
   **(அ) A.O. ஹியூம்** (ஆ) சுபாஷ் சந்திர போஸ் (இ) பால கங்காதர திலகர் (ஈ) காந்தியடிகள்
7. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
   (அ) A.O. ஹியூம் (ஆ) சுரேந்திரநாத் பானர்ஜி **(இ) W.C. பானர்ஜி** (ஈ) பத்ருதீன் தியாப்ஜி
8. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்
   **(அ) தாதாபாய் நௌரோஜி** (ஆ) பால கங்காதர திலகர் (இ) சுபாஷ் சந்திர போஸ் (ஈ) காந்தி
9. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது ?
   (அ) அரவிந்த கோஷ் (ஆ) தாதாபாய் நௌரோஜி (இ) ஃபெரோஸ் ஷா மேத்தா **(ஈ) லாலா லஜபதி ராய்**
10. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?
    (அ) மிண்டோ பிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904 **(ஆ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்**
    (இ) தீவிர தேசியவாத மையம் – சென்னை (ஈ) G.சுப்ரமணியம் – விடிவெள்ளிக் கழகம்
11. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
    (அ) புலின் பிஹாரி தாஸ் (ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
    **(இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்** (ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி
12. **கூற்று:** வ. உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
    **காரணம்:** இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
    **(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
    (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை.
    (இ) கூற்று சரி; காரணம் தவறு.
    (ஈ) கூற்று தவறு; காரணம் சரி.
13. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது ?
    **(அ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.**
    (ஆ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
    (இ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.
    (ஈ) பாரதி திலகரின் Tennets of New Party என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.
14. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது ?
    (அ) பி.பி. வாடியா (ஆ) திலகர் (இ) எச்.எஸ். ஆல்காட் **(ஈ) அன்னிபெசண்ட்**

15. **கூற்று:** ஜின்னாவை "இந்து – முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.
**காரணம்:** லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.
(அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.
**(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கம்.**
(இ) கூற்று தவறு. காரணம் சரி (ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

16. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது ?
(அ) திலகர் (ஆ) மகாத்மா காந்தியடிகள் (இ) பி.பி. வாடியா **(ஈ) மதன்மோகன் மாளவியா**

17. 1916 – ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்
(அ) காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.
(ஆ) முஸ்லிம் லீக் எழுச்சி.
(இ) காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் தற்காலிக இணைப்பு.
**(ஈ) முஸ்லிம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.**

18. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) கதார் கட்சி | – | (i) 1916 | (அ) (1) – (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii) |
| (2) நியூ இந்தியா | – | (ii) 1913 | **(ஆ) (1) – (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)** |
| (3) தன்னாட்சி இயக்கம் | – | (iii) 1909 | (இ) (1) – (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i) |
| (4) மிண்டோ – மார்லி சீர்திருத்தம் | – | (iv) 1915 | (ஈ) (1) – (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii) |

19. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
(அ) லாலா லஜபதிராய் **(ஆ) வேலண்டைடன் சிரோல்** (இ) திலகர் (ஈ) அன்னிபெசண்ட்

20. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார் ?
(அ) பி.பி. வாடியா (ஆ) ஜவஹர்லால் நேரு **(இ) லாலா லஜபதி ராய்** (ஈ) சி.ஆர். தாஸ்

21. "How India wrought for Freedom" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
(அ) லாலா லஜபதி ராய் **(ஆ) அன்னிபெசன்ட்** (இ) C.R. தாஸ் (ஈ) திலகர்

22. சைமன் கமிஷன் காங்கிரசால் ஏன் புறக்கணிக்கப்பட்டது ?
**(அ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.**
(ஆ) சைமன் குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.
(இ) அது முழு சுதந்திரத்திற்கான வாக்குறுதியை கொண்டிருக்கவில்லை.
(ஈ) சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை.

23. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது ?
(அ) ஜனவரி 26, 1930 **(ஆ) டிசம்பர் 31, 1929** (இ) ஜனவரி 26, 1931 (ஈ) மார்ச் 12, 1930

24. 1923–இல் மோதிலால் நேரு மற்றும் சி. ஆர். தாஸ் –ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன ?
(அ) சுதந்திரா கட்சி **(ஆ) சுயராஜ்ய கட்சி** (இ) கம்யூனிஸ்ட் கட்சி (ஈ) கதார் கட்சி

25. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் காலவரிசைப்படுத்துக.
(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.
(3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக்கொள்ள வழிவகுத்தது.
(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.
(அ) (2), (4), (1), (3) **(ஆ) (2), (1), (4), (3)** (இ) (3), (2), (4), (1) (ஈ) (1), (3), (2), (4)

26. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.
(i) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல் (ii) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்
(iii) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல் (iv) அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்
(அ) (i) மற்றும் (iv) **(ஆ) (i) மற்றும் (ii)** (இ) (iii) மற்றும் (iv) (ஈ) (ii) மற்றும் (iii)

27. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?
(அ) மோதிலால் நேரு **(ஆ) இராஜாஜி** (இ) சத்யமூர்த்தி (ஈ) சித்தரஞ்சன் தாஸ்

28. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது ?
(அ) 1920 **(ஆ) 1925** (இ) 1930 (ஈ) 1935


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29. பொருத்துக

(1) கான்பூர் சதி வழக்கு – (i) அடிப்படை உரிமைகள்
(2) மீரட்சதி வழக்கு – (ii) சூரியா சென்
(3) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை – (iii) 1929
(4) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு – (iv) 1924

(அ) (1) – (iii), (2) – (iv), (3) – (i), (4) – (ii)  (ஆ) (1) – (i), (2) – (ii), (3) – (iii), (4) – (iv)
**(இ) (1) – (iv), (2) – (iii), (3) – (ii), (4) – (i)**  (ஈ) (1) – (ii), (2) – (iii), (3) – (iv), (4) – (i)

30. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு

(அ) 1852  **(ஆ) 1854**  (இ) 1861  (ஈ) 1865

31. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) "Chittagong Armoury Raider's Reminiscences" எனும் நூல் கல்பனா தத் என்பவரால் எழுதப்பட்டது.
(ii) கல்பனா தத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.
(iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் என குற்றஞ்சாட்டப்பட்டார்.

(அ) (i) மற்றும் (ii) மட்டும்  (ஆ) (ii) மற்றும் (iii) மட்டும்  (இ) (i) மட்டும்  **(ஈ) அனைத்தும்**

32. முதலாவது பயணிகள் இரயில் 1853–இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது ?

**(அ) பம்பாய் – தானே**  (ஆ) மதராஸ் – அரக்கோணம்  (இ) கொல்கத்தா – ஹுக்ளி  (ஈ) பம்பாய் – பூனா

33. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார் ?

**(அ) எஸ். ஏ. டாங்கே**  (ஆ) எம்.என். ராய்  (இ) ராம் பிரசாத் பிஸ்மில்  (ஈ) பகத் சிங்

34. கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை ?

(i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.
(ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.
(iii) இவ்வழக்கு நீதிபதி H. E. ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது.
(iv) விசாரணை மற்றும் சிறைத் தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**(அ) (i), (ii) மற்றும் (iii)**  (ஆ) (i), (iii) மற்றும் (iv)  (இ) (ii), (iii) மற்றும் (iv)  (ஈ) (i), (ii) மற்றும் (iv)

35. மார்ச் 1931 – இல் நடந்த கராச்சி அமர்வு __________ தலைமையில் நடந்தது.

(அ) சூரியா சென்  **(ஆ) சர்தார் வல்லபாய் படேல்**  (இ) ஜதீந்திரநாத் தாஸ்  (ஈ) கல்பனா தத்

36. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது ?

(அ) மராத்தி  (ஆ) உருது  **(இ) பாரசீகம்**  (ஈ) இந்தி

37. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம் பெற்ற முதல் இந்தியர் __________

(அ) ரஹமத்துல்லா சயானி (ஆ) சர் சையது அகமது கான்  **(இ) சையது அமீர் அலி**  (ஈ) பஃருதீன் தயாப்ஜி

38. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர் __________

(அ) இராஜாஜி  (ஆ) ராம்சே மெக்டொனால்டு  (இ) முகமது இக்பால்  **(ஈ) சர் வாசிர் ஹசன்**

39. 1937 – இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் __________ இல் வெற்றி பெற்றது.

(அ) 5 மாகாணங்கள்  (ஆ) 12 மாகாணங்கள்  (இ) 8 மாகாணங்கள்  **(ஈ) 7 மாகாணங்கள்**

40. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த __________ னை முஸ்லீம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது.

(அ) 23 மார்ச், 1937  (ஆ) 22 டிசம்பர், 1940  **(இ) 22 டிசம்பர், 1939**  (ஈ) 5 பிப்ரவரி, 1939

41. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?

(அ) 25 டிசம்பர், 1942  **(ஆ) 16 ஆகஸ்ட், 1946**  (இ) 21 மார்ச், 1937  (ஈ) 22 டிசம்பர், 1939

42. **கூற்று:** பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்.

**காரணம்:** மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

**(அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**  (ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(இ) கூற்று சரி, காரணம் தவறு.  (ஈ) கூற்று மற்றும் காரணம் தவறு

43. கிரிப்ஸ் தூதுக்குழு __________ ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது

(அ) மௌண்ட்பேட்டன் பிரபு  (ஆ) வேவல் பிரபு  (இ) இர்வின் பிரபு  **(ஈ) லின்லித்கோ பிரபு**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

44. மகாத்மா காந்தியடிகள் 'செய் அல்லது செத்துமடி' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார் ?
**(அ) வெள்ளையனே வெளியேறு** (ஆ) சட்ட மறுப்பு இயக்கம்
(இ) ஒத்துழையாமை இயக்கம் (ஈ) இவை அனைத்தும்

45. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
(அ) ஆசப் அலி **(ஆ) உஷா மேத்தா** இ) கேப்டன் லட்சுமி (ஈ) பிரீத்தி வதேதார்

46. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார் ?
**(அ) ஜவஹர்லால் நேரு** (ஆ) மோதிலால் நேரு (இ) இராஜாஜி (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

47. 1942 – ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டபோது இந்தியாவின் அரசபிரதிநிதி யார் ?
(அ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஆ) வேவல் பிரபு (இ) வின்ஸ்டன் சர்ச்சில் **(ஈ) லின்லித்கோ பிரபு**

48. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது ?
(அ) பிரான்ஸ் (ஆ) ஜெர்மனி (இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் **(ஈ) ஜப்பான்**

49. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் __________ஆகும்
(அ) சுபாஷ் படைப்பிரிவு (ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
(இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு **(ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு**

50. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார் ?
(அ) இம்பால் (ஆ) இரங்கூன் **(இ) சிங்கப்பூர்** (ஈ) மலேயா

51. இந்திய தேசிய இராணுவப்படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது ?
(அ) வைஸ் ரீகல் லாட்ஜ், சிம்லா **(ஆ) செங்கோட்டை, புதுடெல்லி** (இ) சிங்கப்பூர் (ஈ) பினாங்

52. இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார் ?
**(அ) கிளமெண்ட் அட்லி** (ஆ) வின்ஸ்டன் சர்ச்சில் (இ) F.D. ரூஸ்வெல்ட் (ஈ) மௌண்ட் பேட்டன் பிரபு

53. 1940 அக்டோபர் 17 – ல் முதல் தனிநபர் சத்தியாகிரகத்தை தொடங்கியவர் __________
**(அ) வினோபா பாவே** (ஆ) காந்தியடிகள் (இ) திலகர் (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

54. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.
(i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு
(ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
(iii) மௌண்ட்பேட்டன் திட்டம்
(அ) iii, ii, i **(ஆ) ii, i, iii** (இ) ii, iii, i (ஈ) i, ii, iii

55. அரசமைப்பு நிர்ணய சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர் __________
(அ) வல்லபாய் படேல் (ஆ) இராஜேந்திர பிரசாத்
(இ) மௌலானா அபுல்கலாம் ஆசாத் **(ஈ) ஜவஹர்லால் நேரு**

56. பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது ?
(அ) அமேதி **(ஆ) பம்பாய்** (இ) நாக்பூர் (ஈ) மகவ்

57. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் __________
**(அ) ஆந்திரா** (ஆ) காஷ்மீர் (இ) ஒரிஸா (ஈ) அஸ்ஸாம்

58. "இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான சிற்பி"என அழைக்கப்படுபவர் யார் ?
(அ) லால் பகதூர் சாஸ்திரி (ஆ) இராஜாஜி (இ) வல்லபாய் படேல் **(ஈ) ஜவஹர்லால் நேரு**

59. இந்திய அரசாங்கம் __________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.
(அ) முதலாளித்துவ **(ஆ) சமதர்ம** (இ) தெய்வீக (ஈ) தொழிற்சாலை

60. நில சீர்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப்படுத்தப்பட்டது ?
(அ) 1976 (ஆ) 1961 (இ) 1978 **(ஈ) 1972**

61. **கூற்று:** ஜமீன்தாரிமுறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.
**காரணம்:** பல நிலச்சுவான்தார்கள் குத்தகைதார்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயகட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.
(அ) கூற்று சரி, காரணம் தவறு.
**(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**
(இ) கூற்று தவறு, காரணம் சரி. (ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

62. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது ?
(அ) 2007 **(ஆ) 2005** (இ) 2008 (ஈ) 2006

63. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது ?
**(அ) 100** (ஆ) 200 (இ) 75 (ஈ) 150

64. 1951 – ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன ?
(அ) 6 **(ஆ) 5** (இ) 225 (ஈ) 7

65. நிதி ஆயோக் எனும் அமைப்பு எப்பொழுது உருவாக்கப்பட்டது ?
(அ) 2017 **(ஆ) 2015** (இ) 2018 (ஈ) 2016

66. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது ?
(அ) புவியியல் கண்டுபிடிப்பு **(ஆ) மறுமலர்ச்சி** (இ) வர்த்தகப் புரட்சி (ஈ) சமயச் சீர்திருத்தம்

67. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார் ?
(அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ **(இ) ரோஜர் பேக்கன்** (ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

68. **கூற்று:** கலிலியோ கலிலி தேவாலய விரோதபோக்குக்காக கிறித்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
**காரணம்:** சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர்நிகஸின் சூரியமையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
**(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

69. **கூற்று:** துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சியும் கிழக்குப் பகுதிக்கு ஒரு கடல் வழித்தடத்தை கண்டுபிடிக்க ஊக்கமாக இருந்தது.
**காரணம் :** கிழக்கில் இருந்து கிடைக்கும் பொருட்களின் தேவைகள் அதிகரித்ததால் கடல் வழி வாணிபத்தை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் விரும்பின.
(அ) கூற்று சரி காரணம் தவறு
**(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**
(இ) கூற்று தவறு காரணம் சரி.
(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

70. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கில படைகளுக்குத் தலைமை தாங்கியவர்
**(அ) வில்லியம் ஹோவே** (ஆ) ரிச்சட்டு லீ (இ) ராக்கிங்காம் (ஈ) ஜார்ஜ் வாஷிங்டன்

71. டென்னிஸ் மைதான உறுதிமொழிக்கு இட்டுச் சென்ற எதிர்ப்புக்குத் தலைமையேற்ற பிரபு __________ ஆவார்.
(அ) லஃபாயட் (ஆ) மாரட் **(இ) மிராபு** (ஈ) டாண்டன்

72. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| (1) மாண்டெஸ்கியூ | – | (i) ஜேகோபியர்கள் | (அ) (1) – (iv), (2) – (i), (3) – (ii), (4) – (iii) |
| (2) வால்டர் | – | (ii) ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி | (ஆ) (1) – (i), (2) – (iii), (3) – (iv), (4) – (ii) |
| (3) பயங்கர ஆட்சி | – | (iii) பதினான்காம் லூயியின் காலம் | (இ) (1) – (i), (2) – (iv), (3) – (iii), (4) – (ii) |
| (4) ஜான் லாக் | – | (iv) சட்டங்களின் சாரம் | **(ஈ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)** |

73. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.
(அ) மார்செய்ல்ஸ் (ஆ) வெர்செய்ல்ஸ் **(இ) டியூலெர்ஸ்** (ஈ) தெளலன்

74. __________ நகரம்'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.
(அ) லிவர்பூல் **(ஆ) மான்செஸ்டர்** (இ) கிளாஸ்கோ (ஈ) லங்காசயர்

75. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு __________இல் நடைபெற்றது.
(அ) 1775 **(ஆ) 1773** (இ) 1784 (ஈ) 1799

76. பிரெஞ்சுப் புரட்சியின் காலம் __________
(அ) 1756 – 1763 (ஆ) 1775 – 1783 (இ) 1689 – 1755 **(ஈ) 1789 – 1795**

77. நெப்போலியன் முதன்முறை நாடுகடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்ட இடம் __________ஆகும்.
(அ) கார்சிகா **(ஆ) எல்பா** (இ) வாட்டர்லூ (ஈ) செயின்ட் ஹெலனா

78. மார்க்சும், ஏங்கல்சும் தங்களின் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ என்ற நூலை ______ ஆண்டில் வெளியிட்டனர்.
(அ) 1842 **(ஆ) 1848** (இ) 1867 (ஈ) 1871


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

79. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் __________ ஆவார்.
(அ) சார்லஸ் ஆல்பிரட் (ஆ) பிஸ்மார்க் (இ) மூன்றாம் நெப்போலியன் **(ஈ) கரிபால்டி**

80. ஜெர்மானிய ஒருங்கிணைவை அடைவதற்கு 'இரத்தமும் இரும்பும்' என்ற கொள்கையை கையாண்டவர் ___
(அ) அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் (ஆ) க்யூசப் கரிபால்டி
(இ) மூன்றாம் நெப்போலியன் **(ஈ) ஆட்டோ வான் பிஸ்மார்க்**

81. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் __________ஆவார்.
(அ) ஃபிஷர் (ஆ) ஜான் A. ஹாப்சன் **(இ) கௌர்னே** (ஈ) கார்ல் மார்க்ஸ்

82. An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations என்ற நூலை எழுதியவர் __________ ஆவார்.
**(அ) ஆடம் ஸ்மித்** (ஆ) தாமஸ் பைன் (இ) குஸ்னே (ஈ) கார்ல் மார்க்ஸ்

83. இங்கிலாந்து __________ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.
(அ) 1858 **(ஆ) 1833** (இ) 1836 (ஈ) 1843

84. 1879 – ஆம் ஆண்டில் __________கட்டண சட்டத்தை இயற்றியது.
(அ) அமெரிக்க ஐக்கிய நாடு **(ஆ) ஜெர்மனி** (இ) பிரான்ஸ் (ஈ) பிரிட்டன்

85. __________ க்குப்பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
(அ) இரண்டாம் ஆங்கிலோ – சீனப் போர் (ஆ) ரஷ்ய – ஜப்பனியப் போர்
**(இ) சீன – ஜப்பானியப் போர்** (ஈ) இரண்டாம் அபினிப் போர்

86. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு __________ஆகும்.
**(அ) அமெரிக்க ஐக்கிய நாடு** (ஆ) ஸ்பெயின் (இ) பிரான்ஸ் (ஈ) பிரிட்டன்

87. எந்த நாடு 21 நிர்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது ?
(அ) பிரிட்டன் (ஆ) பிரான்ஸ் (இ) ரஷ்யா **(ஈ) ஜப்பான்**

88. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.
(அ) விடுதலை ஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்
(ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்
(இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் – முதலாம் நிக்கோலஸ்
**(ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்**

89. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார் ?
(அ) ஜெனரல் லூடன்டார்ஃப் **(ஆ) வான் ஹிண்டன் பர்க்**
(இ) ஜெனரல் ஸ்மட்ஸ் (ஈ) ஆல்ஃபிரட்வான் பெத்மன்

90. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது ?
**(அ) அவந்தி** (ஆ) ப்ராவ்தா (இ) மார்க்சிஸ்ட் (ஈ) மெய்ன் காம்ப்

91. **கூற்று:** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர்முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.
**காரணம்** : அகழிப்போர் முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.
(அ) கூற்று சரி காரணம் தவறு. **(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(இ) கூற்று தவறு காரணம் சரி.
(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

92. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் __________ ஆவார்.
**(அ) யாமமோடோ** (ஆ) ஸ்கூஸ்னிக் (இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் (ஈ) ஹிரோஹிடோ

93. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழிநடத்தியவர்– __________ ஆவார்.
(அ) ஜெனரல் டி கால் **(ஆ) மெக் ஆர்தர்** (இ) ஜார்ஜ் மார்ஷல் (ஈ) ஐசன் ஹோவர்

94. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது __________ என்னுமிடத்தில் ஆகும்.
(அ) போட்ஸ்டாம் **(ஆ) எல் அலாமின்** (இ) ஸ்டாலின்கிராட் (ஈ) மிட்வே

95. நீண்ட பயணம் 1934 உடன் தொடர்பு உடையவர் __________
(அ) சியாங்க் – கே – ஷேக் (ஆ) சன் யாட் சென் **(இ) மா சே துங்** (ஈ) யுவான் ஷி – காய்

96. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்
(அ) சர்ச்சில் (ஆ) பெர்னாட் பரூச் **(இ) ஜார்ஜ் ஆர்வெல்** (ஈ) ஜார்ஜ் கென்னன்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

97. ட்ரூமன் கோட்பாடு __________ பரிந்துரைத்தது.

**(அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவி**

(ஆ) காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது

(இ) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது

(ஈ) அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நா.சபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

98. கீழ்க்காண்பவனவற்றை காலவரிசைப்படி ஒழுங்கு செய்யவும்.

(1) வார்சா உடன்படிக்கை (2) சென்டோ (3) சீட்டோ (4) நேட்டோ

(அ) (1), (2), (3), (4) (ஆ) (4), (2), (3), (1) (இ) (1), (3), (2), (4) **(ஈ) (4), (3), (2), (1)**

99. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் __________ ஆவார்.

**(அ) ஆல்பிரட் சாவே** (ஆ) மார்ஷல் (இ) மோலோடோவ் (ஈ) ஹாரி ட்ரூமன்

100. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24–இல் __________உருவானது.

**(அ) 51 உறுப்பினர்களுடன்** (ஆ) 100 உறுப்பினர்களுடன்

(இ) 126 உறுப்பினர்களுடன் (ஈ) 72 உறுப்பினர்களுடன்

101. சூயஸ் கால்வாய் செங்கடலை __________இணைக்கிறது.

(அ) ஏடன் வளைகுடாவுடன் (ஆ) காம்பே வளைகுடாவுடன்

**(இ) மத்தியதரைக்கடலுடன்** (ஈ) அரபிக்கடலுடன்

102. ஐ.நா.சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வே லை __________ ஐ சேர்ந்தவராவார்.

(அ) சிங்கப்பூர் (ஆ) பர்மா **(இ) நார்வே** (ஈ) ஜப்பான்

103. சோவியத் யூனியன் __________ இல் சிதறுண்டது.

(அ) நவம்பர் 17, 1991 **(ஆ) டிசம்பர் 8, 1991** (இ) மே 1, 1991 (ஈ) அக்டோபர் 17, 1991

104. ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது ?

(அ) 1946 நவம்பர் 24 (ஆ) 1944 அக்டோபர் 24 (இ) 1945 நவம்பர் 24 **(ஈ) 1945 அக்டோபர் 24**

105. உலகின் முதல் ஹைட்ரஜன் அணுகுண்டை அமெரிக்கா வெடித்து பரிசோதனை செய்த ஆண்டு எது?

(அ) 1954 (ஆ) 1951 (இ) 1955 **(ஈ) 1952**

----------

## இரு மதிப்பெண் வினாக்கள்

**1. தேசியம் என்றால் என்ன ?**

- தேசியம் என்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும், பக்தியோடும் இருத்தல்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைவிட உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.

**2. இண்டிகோ (அவுரி) கலகம் குறித்து குறிப்பு வரைக.**

- இண்டிகோ கலகம் 1859–60 ஆகிய ஆண்டுகளில் வங்காளத்தில் நடைபெற்றது.
- அவுரி சாகுபடிக்கு பண்ணையார் சந்தை விலையை விடக் குறைவாகவே கொடுத்ததால் விவசாயிகள் கலகத்தில் இறங்கினர்.

**3. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.**

- இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் ஐரோப்பியரின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. தொடக்ககால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.**

- தாதாபாய் நௌரோஜி
- பால கங்காதர திலகர்
- லாலா லஜபதி ராய்
- கோகலே

**5. ஆங்கிலேயர் ஆட்சியில் குடிமைப்பணி தேர்வு பற்றி சுருக்கமாக எழுதுக.**

- இந்திய நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கும் உயர்நிலை அதிகாரிகள், இங்கிலாந்தில் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகளின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர்.
- அத்தேர்வுகளில் இந்தியர்கள் அதிகளவில் வெற்றிபெறுவதைத் தடுப்பதற்காக வயதுவரம்பு இருபத்தொன்றிலிருந்து பத்தொன்பதாகக் குறைக்கப்பட்டது.

**6. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' என்றால் என்ன ?**

- மிதவாதிகளின் கவனமான அணுகுமுறை
- ஆங்கிலேயரிடம் மன்றாடுதல்,
- மனு சமர்பித்தல், போன்றவையே இறைஞ்சுதல் கொள்கை ஆகும்.

**7. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார் ?**

- சுதேசி என்பதன் பொருள் ஒருவரது சொந்த நாடு என்பதாகும்.
- சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

**8. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.**

- லாலா லஜபதி ராய்,
- பால கங்காதர திலகர்,
- பிபின் சந்திரபால்,
- அரவிந்த கோஷ்

**9. தீவிர தேசியவாதம் 1908–க்குப் பின்னர் ஏன் குறைந்தது ?**

- இந்துமத நம்பிக்கையால் முலாம் பூசப்பட்டு வலியுறுத்திச் சொல்லப்பட்ட தேசப்பற்றை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
- தங்களின் முந்தையத் தலைவர்களைப் போலவே சுதேசி இயக்கத் தலைவர்கள் சமூகத்தின் பெரும்பகுதி மக்களை ஊடுருவத் தவறினர்.

**10. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது ?**

- முதல் உலகப் போரின் முடிவில் துருக்கிய கலீபாவின் அதிகாரத்தை துண்டாடியது இஸ்லாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.
- எனவே ஆட்டோமன் அரசை ஆதரித்து இந்தியாவில் கிலாபத் இயக்கம் தொடங்கப்பட்டது.

**11. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.**

- வாராந்திரப் பத்திரிகை – காமன் வீல் (1914)
- புத்தகம் – How India Wrought for Freedom (1915)

**12. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார் ?**

- 1921–இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவின் பல நகரங்களுக்கு மேற்கொண்ட பயணம் புறக்கணிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**13. காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின்போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர் ?**

- ராஜேந்திர பிரசாத் மற்றும் மஜாரூல் ஹக்
- ஆச்சார்ய கிருபளானி மற்றும் மஹாதேவ தேசாய்

**14. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.**

- டாக்டர் அம்பேத்கர் இவ்வமைப்பைத் தொடங்கினார்.
- இது தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு ஆகும்.

**15. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது ?**

- எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு இந்தச் சட்டம் அதிகாரமளித்தது.
- இச்சட்டத்தின் மூலம் பல அடக்குமுறை அதிகாரங்களுடன் தன்னை பலப்படுத்திக்கொள்ள அரசு விரும்பியது.

**16. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக**

- கே.எஃப். நாரிமன்,
- எம்.சி. சக்லா

**17. "இரண்டாவது லாகூர் சதி" என்றறியப்படும் நிகழ்வு யாது ?**

- பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கே இரண்டாவது லாகூர் சதி வழக்கு ஆகும்.
- இவ்வழக்கில் ராஜகுரு, சுகதேவ், பகத்சிங் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

**18. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன ?**

- பார்சி வணிகக் குடும்பத்தில் இருந்து வந்தவர்.
- இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழில் அதிபர் ஆவார்.

**19. சர் சையது அகமது கான் பிரிட்டிஷ் அரசினை ஏன் ஆதரித்தார் ?**

- இந்துக்களால் ஆளப்படும் நாட்டில், சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு தக்க உதவிகள் கிடைக்காது என்று எண்ணினார்.
- பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இணைந்து செயல்படுவதன் மூலம் தனது இனத்திற்கு பெரும்பங்கினை பெற்றுத்தர இயலும் என்று எண்ணினார்.

**20. தனித்தொகுதி முறையினை பற்றி எழுதுக.**

- 1909–ஆம் ஆண்டு மிண்டோ–மார்லி சட்டம், முஸ்லிம்களுக்கு தனித்தொகுதியினை வழங்கியது.
- இம்முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.

**21. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன ?**

- இஸ்லாமியர்களுக்கான தனிநாடு எனும் கோரிக்கையாகும்.
- இக்கோரிக்கையை முஸ்லிம் லீக் கட்சியும், அதன் ஆதரவாளர்களும் முன் வைத்தனர்.

**22. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக ?**

- வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.

**23. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார் ?**

- ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த போர்க்கைதிகளில் 40,000 பேரைத் தேர்ந்தெடுத்தார்.
- அதன்மூலம் 1942–இன் இறுதியில் இந்திய தேசிய இராணுவத்தை மோகன் சிங் பலப்படுத்தினார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**24. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது ?**

- இந்திய அரசாங்கச் சட்டம் 1935–இன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆவணம் ஆகும்.
- இந்திய சுதேச அரசர்கள் தான் விரும்பும் நாட்டுடன் இணைய அனுமதித்தது.

**25. அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம் என்ன ?**

- காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கப்படுவதே இதன் முக்கியத்துவம் ஆகும்
- மஹாராஜா ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க, இணைப்புறுதி ஆவணத்தில் கையொப்பமிட்டார்.

**26. ஜே.வி.பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன ?**

- மொழிவாரி மாகாணங்கள் குறுகிய பிராந்தியவாதத்தை வலியுறுத்துகிறது.
- மொழியானது பிணைக்கும் ஆற்றல் மட்டுமல்ல பிரிக்கும் ஆற்றலும் உடையது.

**27. நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக.**

- பொருளாதாரம் வலுவற்றதாக இருந்தது.
- வறுமையின் அளவு அதிகமாக இருந்தது.

**28. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை ?**

- ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது, சுரண்டலை ஒழிப்பது, செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை தடுப்பது ஆகியவையாகும்.
- சமூகநீதியானது அனைத்து குடிமக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சம வாய்ப்பை பெறுவதாகும்.

**29. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.**

- இவ்வியக்கத்தை தொடங்கியவர் வினோபா பாவே ஆவார்.
- பெரும் நில உடைமையாளர்கள் தங்களிடமுள்ள உபரி நிலங்களை தாமாக முன்வந்து வழங்க வேண்டும்.

**30. பசுமைப் புரட்சி என்றால் என்ன ?**

- மரபுசார்ந்த விவசாயத்தைப் போலல்லாமல், அதிக மகசூலைத் தருகின்ற விதைகளும், இரசாயன உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்பட்டன.
- உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக இந்தியாவில் பசுமைப் புரட்சி தொடங்கப்பட்டது.

**31. நட்சத்திர சேம்பர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன ? அது ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது ?**

- கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை அரச சபையின் விசாரணைக்கு உட்படுத்த இதனை ஏழாம் ஹென்றி ஏற்படுத்தினார்.
- நீதிமன்ற அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது.

**32. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன் ?**

- நூறாண்டுப் போரில் பிரெஞ்சு அரசர் ஏழாம் சார்லசுக்காக, ஜோன் ஆஃப் ஆர்க் பங்குபெற்று ஆர்லியன்ஸ் போரை வென்றார்.
- எனவே, ஆர்லியன்ஸின் பணிப்பெண் என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

**33. வடஅமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வக்குடி மக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின ?**

- பூர்வகுடிகளை அழித்தொழிக்க ஐரோப்பியர்கள் பின்பற்றிய தந்திரங்களில் ஒன்று நோய்களைப் பரப்புவதாகும்.
- காலனியவாதிகள் தங்கம் தேடும் முயற்சியில் பழங்குடி மக்களின் கிராமங்களில் பதுங்கியிருந்து கொடூரமாகத் தாக்கினர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**34. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?**

- பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்.
- பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.

**35. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.**

- 1. மதகுருமார்கள், 2. நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள் என சமுதாயம் பிரிவடைந்திருந்தது.
- முதல் இரண்டு பிரிவினரும் பல வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தனர்.

**36. பாஸ்டன் படுகொலை பற்றி நீங்கள் அறிந்ததென்ன ?**

- 1770 – இல் பாஸ்டன் நகரில் டவுன்ஷெண்ட் சட்டங்களை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது.
- பிரிட்டிஷ் வீரர்கள் அமெரிக்கர்களை சுட்டுக் கொன்றனர்.

**37. இத்தாலியை "வெறும் பூகோள வெளிப்பாடே" என மெட்டர்னிக் ஏன் கூறினார் ?**

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தாலி 12 பெரு மாநிலங்களையும் பல குறுநிலங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.
- எனவே இத்தாலி "வெறும் பூகோள வெளிப்பாடே" என்று மெட்டர்னிக் குறிப்பிட்டார்.

**38. இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.**

- பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக்காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டது.
- இதன் மூலம், வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழைச் சிறார்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

**39. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.**

- 1916 – இல் டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்த முக்கிய கடற்போர் இதுவாகும்.
- முதல் உலகப் போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது.

**40. நிகிலிசம் என்றால் என்ன ?**

- பல்லாண்டுகால சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவமே நிகிலிசமாகும்.
- நிகிலிசம் நாட்டின் அரசு, தேவாலயம், குடும்பம் போன்ற நிறுவனங்களின் அதிகாரத்தை மறுத்தது.

**41. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன ?**

- மூன்றாவது ரெய்ச் என்று குறிப்பிடப்படுவது ஹிட்லரின் நாஜி அரசு ஆகும்.
- ஜெர்மனியில் முதல் உலகப் போருக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

**42. முதல் உலகப் போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.**

- ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி

**43. ஹிட்லர் பற்றி எழுதுக.**

- நாசிசக்கட்சியின் தலைவர், அவர் மெய்ன் காம்ப் (எனது போராட்டம்) என்ற சுயசரிதையை எழுதினார்.
- இரண்டாம் உலகப் போருக்கு காரணமானவர்களில் ஒருவர்.

**44. பன்னாட்டு சங்கத்திலிருந்து 1933 – ஆம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது ?**

- 1933 – ஆம் ஆண்டு ஜெனீவாவில் பன்னாட்டு சங்கம் நடத்திய ஆயுதக் குறைப்பு மாநாட்டில் பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறு ஆயுதமாக்கல் கோரிக்கை விடுத்தது.
- இதற்கு பிரான்ஸ் மறுத்ததால், ஹிட்லர் அம்மாநாட்டில் இருந்தும் பன்னாட்டு சங்கத்தில் இருந்தும் ஜெர்மனியை விலக்கிக் கொண்டார்.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**45. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை ?**

- சூடட்டன்லாந்து பகுதியை ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொள்ள ஒப்புக்கொண்டது.
- செக்கோஸ்லாவேகியாவின் பகுதிகளை போலந்திற்கும், ஹங்கேரிக்கும் பிரித்துக்கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

**46. நான்கிங் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை ஆய்க.**

- நான்கிங் உடன்படிக்கை, பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளை திறந்துவிட்டது.
- சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒரு தொகையையும் வழங்கியது.

**47. 'நீண்ட பயணம்' – குறிப்பு வரைக.**

- 1934–இல் பொதுவுடைமை இராணுவம் மேற்கொண்டதே 'நீண்ட பயணம்' ஆகும்.
- இப்பயணத்தின் மூலம் மாவோ சீனாவில் மக்களின் ஆட்சியாளர் ஆனார்.

**48. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.**

- அமெரிக்காவின் உளவு நிறுவனம் "மத்திய புலனாய்வு முகமை" (CIA) 1947 – இல் நிறுவப்பட்டது.
- சோவியத் யூனியனின் உளவு நிறுவனம் "தேசிய பாதுகாப்பு கமிட்டி" (KGB) 1954 – இல் உருவாக்கப்பட்டது.

**49. 'கோமிங்பார்ம்' குறித்து நீங்கள் அறிவதென்ன ?**

- சோவியத் ரஷ்யா 'கோமிங்பார்ம்' என்னும் அமைப்பை 1947 – செப்டம்பரில் உருவாக்கியது.
- இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.

**50. பனிப்போர் காலகட்டத்தைச் சேர்ந்த 'மறைமுக' போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

- கொரியப் போர் (1950 – 53)
- வியட்நாம் போர் (1955 – 75)

**51. சீட்டோ – குறிப்பு வரைக.**

- 1954 – செப்டம்பரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை (சீட்டோ) என்னும் அமைப்பு நிறுவப்பட்டது.
- இது ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதிநிதியாக அமைந்தது ஆகும்.

----------

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

**1. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்து குறிப்புகளை" ஆய்க.**

- 1835–இல் மெக்காலே புகழ்பெற்ற இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.
- ஆங்கில வழியில் மேற்கத்திய கல்விக்கு ஆதரவாக வாதிட்டார்.
- நிறத்தில் இந்தியராகவும், ஒழுக்கத்தில், அறிவில் ஆங்கிலேயராகவும் இருக்கும் ஒரு மக்கள் பிரிவினரை இந்தியாவுக்குள் உருவாக்க விரும்பினார்.

**2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.**

- தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள், தொழில் மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளைப் பரப்பின.
- அரசியலை விமர்சனம் செய்தன.
- நாட்டை பாதிக்கும் பிரச்சனைகளைப் பற்றி பேசியது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. மே 1884 –இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.**

- G. சுப்ரமணியம்,
- வீர ராகவாச்சாரி
- அனந்தா சார்லு
- ரங்கையா
- பாலாஜி ராவ்
- சேலம் ராமசாமி

**4. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.**

- மிதவாத தேசியவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பவருக்கு எதிராக, தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதி ராயின் பெயரை முன்மொழிந்தனர்.
- இயக்கத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக லாலா லஜபதி ராய் போட்டியிட மறுத்தார்.
- மாநாடு குழப்பத்தில் முடிந்தது.

**5. பெருவாரியான மக்களை ஒன்று திரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை ?**

- உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல்
- பஞ்சங்களின் போதும், நோய்களின் தாக்கத்தின் போதும் சேவையாற்றுதல்
- விழாக்காலங்களில் சுதேசி செய்தியைப் பரப்புரை செய்தல்

**6. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.**

- சித்தரஞ்சன் தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார்.
- ஆங்கில ஆட்சிக்கு எதிராக அரவிந்த கோஷ் சதியில் ஈடுபட்டார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டதால் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார்.
- புரட்சிகர தேசியவாதிகள் கதாநாயகர்களாக சித்தரிக்கப்பட்டனர்.

**7. வ. உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.**

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தினார்.
- 1906 – இல் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.

**8. வங்கப் பிரிவினை பற்றி சிறு குறிப்பு வரைக.**

- 1905 – ஆம் ஆண்டு வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- இதனை பிரித்தவர் கர்சன் பிரபு ஆவார்.
- இதன் விளைவாக சுதேசி இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.

**9. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்.**

- பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
- தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது.

**10. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன் ?**

- கோமகடமரு என்ற கப்பல் இந்திய வம்சாவளியினருடன் கனடாவிலிருந்து இந்தியா திரும்பியது.
- அப்போது பிரிட்டிஷ் போலிசாருடன் மோதல் ஏற்பட்டது.
- இம்மோதலில் அந்தக் கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர்.

**11. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன ?**

- பக்கிங்ஹாம், பெரம்பூர், கர்நாடிக் மில் ஆகியவற்றின் தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்பட்டதன் காரணமாக இந்த தொழிற்சங்கம் ஏற்படுத்தப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- தொழிலாளர்கள் மீது அடிக்கடி நடத்திய தாக்குதல், போதுமான ஊதியம் வழங்காதது, ஆகியன இந்த தொழிற்சங்கம் அமையக் காரணமாக அமைந்தன.
- இந்த காலகட்டத்தில் பல தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**12. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.**

- ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் ஒரே ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது.
- அங்கு கூடியிருந்த மக்களை, ஜெனரல் டையர் குண்டுகள் தீரும்வரை சுடுமாறு உத்தரவிட்டார்.
- அரசு தகவலின்படி 379 பேர் இறந்தனர்.

**13. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது ?**

- வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.
- இட ஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது.
- பூனா ஒப்பந்தம் காந்தியடிகளுக்கும், அம்பேத்காருக்கும் இடையே ஏற்பட்டது.

**14. மாற்றத்தை விரும்புபவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள் – வேறுபடுத்துக.**

| மாற்றத்தை விரும்புபவர்கள் | மாற்றத்தை விரும்பாதவர்கள் |
|---|---|
| ➢ சுயராஜ்ஜியக் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். | ➢ தேர்தல் அரசியல் தேசிய வாதிகளின் கவனத்தை திசை திருப்பும் என்றனர். |
| ➢ சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு மற்றும் சத்தியமூர்த்தி. | ➢ வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் மற்றும் இராஜாஜி. |

**15. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார் ?**

- கொரில்லா பாணி தாக்குதலை நடத்த திட்டமிட்டார்.
- 1930 – ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைத்தளம் தாக்கப்பட்டது.
- இரயில்வே, தந்தி அலுவலகம், காவல் முகாம்கள் தாக்கப்பட்டு சிட்டகாங் தனிமைப்படுத்தப்பட்டது.

**16. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.**

- இது பீகாரில் உள்ள சாகி நகரில் அமைந்துள்ளது.
- 1907–இல் தோரப்ஜி டாடா என்பவரால் அமைக்கப்பட்டது.
- சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

**17. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.**

- திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை தோற்றுவித்தார்.
- 1923 – இல் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார்.
- 1928 – ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்ததில் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

**18. 1909 –ஆம் ஆண்டின் மிண்டோ – மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.**

- முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி முறையை அறிமுகப்படுத்தியது.
- இந்த முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.
- பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது.

**19. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.**

- முஸ்லிம் லீக்
- சிரோமணி அகாலி தளம்
- இந்து மகா சபை

**20. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.**

- டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின் அரசியல் சாசன வரைவுக் குழுவை உருவாக்குதல்.
- அதில் பாகிஸ்தான் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**21. இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.**

- காங்கிரசின் முக்கிய மேல்மட்டத் தலைவர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தனர்.
- அதனால் கல்கத்தாவில் கூடிய அனைத்து இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் போஸ் பதவி துறந்தார்.
- 1939 – இல் அவர் காங்கிரஸின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

**22. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார் ?**

- விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது.
- இரண்டாம் உலகப் போரில் சுபாஷ் சந்திரபோஸ் அச்சு நாடுகளை ஆதரித்தார்.
- இந்திய தேசிய இயக்கத்தையும், காந்தியையும் சர்ச்சில் வெறுப்புடன் பார்த்தார்.

**23. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை ?**

- குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யும் ஓர் ஆவணமாக உள்ளது.
- அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை உள்ளடக்கியது.
- சுதந்திரமான தேர்தல் ஆணையத்தையும், வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமையையும் உறுதி செய்தது.

**24. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.**

- பிரிவினையை சமாளித்தல், பொருளாதார திட்டமிடல், கல்வி முறையை சீரமைத்தல் ஆகியன முக்கிய சவாலாக இந்தியாவிற்கு விளங்கியது.
- 500 – க்கும் மேற்பட்ட சுதேச அரசுகளை ஒருங்கிணைத்தல் முக்கிய பணியாக மாறியது.
- மொழிகள் அடிப்படையிலான வேறுபாட்டை தீர்த்துவைத்தல் ஆகியனவாகும்.

**25. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.**

- நாடுகள் ஒன்றுக்கொன்று அவற்றின் இறையாண்மையை மதித்து நடத்தல்.
- நாடுகள் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
- ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.
- நாடுகளுக்கிடையேயான சமத்துவம் மற்றும் கூட்டுறவு.
- சமாதான சகவாழ்வு.

**26. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை ?**

- குத்தகையை முறைப்படுத்துவது.
- குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.
- நிலத்திற்கான உரிமையை குத்தகைதாரர்களுக்கு அளித்தல்.

**27. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை ?**

**நேர்மறை விளைவுகள்:**

- இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.
- பால் மற்றும் முட்டை உற்பத்தி தொடர்ந்து அதிகரித்தது.

**எதிர்மறை விளைவுகள்:**

- வசதி வாய்ப்புள்ள – வசதி வாய்ப்பற்ற பகுதிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தது.
- இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியன சூழலியல் பிரச்சனைகளை ஏற்படுத்தின.

**28. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை ?**

- ஒன்று நிறுவன அடிப்படையிலானது, மற்றொன்று தொழில்நுட்பம் சார்ந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது, நில உடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாய தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் இடையே நிலவிய சமூக பொருளாதார உறவுகளைக் குறிப்பதாகும்.
- தொழில்நுட்ப காரணிகள் என்பது, சிறந்த விதைகள் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகள், ரசாயண உரங்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும்.

**29. ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளைக் குறிப்பிடுக.**
- பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்.
- தேசிய வருமானத்திலும், தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி.
- தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகரிப்பு.

**30. 1492–இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.**
- பாலோஸ் துறைமுகத்திலிருந்து மூன்று சிறிய கப்பல்கள் மூலமாகப் பயணித்தார்.
- இரண்டு மாதங்கள் மற்றும் ஒன்பது நாட்கள் பயணத்திற்குப் பின் இந்தியா என்று அவர் கருதிய புதிய நிலப்பகுதியை அடைந்தார்.
- ஆனால் அது அமெரிக்கா எனும் புதிய கண்டமாகும்.

**31. அமெரிக்கப் புரட்சியின் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்க.**
- மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் பரவலாயின.
- கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.
- அமெரிக்கப் புரட்சி காலனி ஆதிக்கத்திற்கு ஒரு பின்னடைவாகும்.

**32. "1789 – ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" – விளக்குக.**

**மாண்டெஸ்கியூ**
- "சட்டங்களின் சாரம்" எனும் தனது நூலில் அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.

**வால்டேர்**
- "14 – ஆம் லூயியின் காலம் "என்ற தனது நூலில் மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளையும், முடியாட்சியையும் எதிர்த்தார்.

**ரூஸோ**
- "சமூக ஒப்பந்தம்" எனும் நூலில் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்த வேண்டும் என வாதிட்டார்.

**33. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது ?**
- பிரான்சில் அரசியல் கைதிகள், எதிர்புரட்சியாளர்கள் தீட்டிய சதியில் இணையப் போவதாக மக்கள் நம்பினர்.
- இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சலைகளைத் தாக்கின.
- அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர்.

**34. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாய் வரைக.**
- சைமன் பொலிவர் 'ஜமைக்கா கடிதம்' எனும் கடிதத்தில் சுதந்திரத்தின்பால் தனக்கிருந்த நம்பிக்கையை வலியுறுத்தினார்.
- வெனிசுலாவில் சைமன் பொலிவரின் தலைமையில் நாட்டுப்பற்றாளர்கள் ஒன்றுதிரண்டனர்.
- ஸ்பானிய காலனி ஆதிக்கத்திற்கு எதிராக 'மரிக்கும் மட்டிலும் போர்' என்ற முழக்கத்துடன் போரைத் தொடங்கினார்.

**35. பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுபடுத்துக.**
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்த பல நிகழ்வுகள் ஐரோப்பிய கண்டம் முழுவதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வையும், தேசியவாதப் போக்கையும் ஒடுக்க முனைந்த மெட்டர்னிக்கின் கூற்று தான், பிரான்ஸ் தும்பினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் பிடிக்கும் என்பதாகும்.
- அவ்வாறாயின், பிரான்சில் மும்முறை புரட்சி வெடித்த ஆண்டுகளான 1789, 1830 மற்றும் 1848 ஆகிய ஆண்டுகளில் பிரான்ஸ் தும்மியதாகவே கருத்தில் கொள்ள வேண்டும்.

**36. ஏழை மக்களும் உழைக்கும் வர்க்கமும் ஏற்றம் பெற பாரிஸ் கம்யூன் எடுத்த நடவடிக்கைகளை விவாதத்திற்கு உட்படுத்துக.**

- அடுமனையில் இரவு பணியைத் தடைசெய்தது.
- தொழில் பட்டறைகளோ, தொழிற்சாலைகளோ உரிமையாளரால் மூடப்பட்டிருந்தால் அதனை தொழிலாளர்களைக் கொண்டு திறக்கச் செய்தல்.
- விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும், குழந்தைகளுக்கு கட்டணமில்லா கல்வியைக் கொடுக்கவும் வகை செய்தது.

**37. மெட்டர்னிக் சகாப்தத்தில் ஐரோப்பியக் கூட்டு (Concert of Europe) எத்தகைய பங்காற்றியது என்பதனை விளக்குக.**

- நெப்போலியன் சகாப்தத்திற்கு பின், ஐரோப்பாவின் முக்கிய சக்திகளான ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளால் ஐரோப்பிய ஒருங்கிணைவு உருவாக்கப்பட்டது.
- இது ஐரோப்பாவில் ஒழுங்கை நிலைநிறுத்திடவும் அதிகார சமநிலையை காத்திடவும் பாடுபட்டது.
- "மெட்டர்னிக்கின் சகாப்தம்" என்று சொல்லப்பட்ட காலத்தில் பெரும் சக்திகள், முன்பிருந்த நிலையை பாதுகாக்கும் நோக்கத்தை வெளிப்படுத்தின.

**38. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது ?**

- முதல் உலகப் போரின் ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும் உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தை தோண்டி அதனுள் அடைக்கலம் தேட வைத்தது.
- அகழிமுறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும்.
- அகழிகள் மூலம் உணவு, வெடிபொருட்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன.

**39. மிக ஆபத்தான U – படகுகள் மற்றும் Q – கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன ?**

- U – படகுகள், முதல் உலகப்போரில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- Q – கப்பல்கள், பிரிட்டனுக்குச் சொந்தமானதாகும்.
- இது பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும்.

**40. ரஷ்யாவில் 1905 – இல் நிகழ்ந்த புரட்சியின் காரணங்களையும், போக்கையும் ஆராய்க.**

**காரணங்கள்**

- சார் மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் அரசாட்சி அனுபவம் இல்லாதவர்.
- ஜப்பானை எதிர்த்து போரிட்டு ரஷ்யா தோல்வியடைந்தது.

**போக்கு**

- அருட்தந்தை கேபன் 1905 ஜனவரி 23 அன்று பெண்கள், குழந்தைகள், பொதுமக்கள் கலந்துகொண்ட ஒரு பேரணியை நடத்தினார்.
- அமைதியாக நடைபெற்ற ஊர்வலத்தின் மீது காவல்துறையினரும், இராணுவ வீரர்களும் துப்பாக்கி சூடு நடத்தினர்.

**41. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.**

- ஐரோப்பா தன் அந்தஸ்தையும் கௌரவத்தையும் இழந்தது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்கா ஐக்கிய நாடும், சோவியத் ரஷ்யாவும் உருவாயின.
- காலனி நாடுகளில் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**42. சீனாவில் நிகழ்ந்த பாக்ஸர் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைத் தருக.**

- பாக்ஸர்கள் ஷாண்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளே ஆவர்.
- பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் மஞ்சு வம்சத்தை முடிவிற்கு கொண்டு வருவதாகும்.
- முறைகேடாக சலுகையைப் பெற்றுவந்த மேற்கத்தியர்களை சீனாவை விட்டு அப்புறப்படுத்த பாக்ஸர்கள் முயன்றனர்.

**43. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.**

- சுகர்னோ, இந்தோனேஷிய தேசிய கட்சியை நிறுவினார்.
- 1931 – ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அவர், 1942 – ஆம் ஆண்டு வரை சிறையில் வாடினார்.
- 1949 – டிசம்பரில் இந்தோனேஷியா விடுதலைப்பெற்ற நாடானது.

**44. ஐ. நா. சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.**

- 1944 – இல் வாஷிங்டன் நகரின், டம்பார்டன் ஓக்ஸ் எனும் மாளிகையில் வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி உலக அமைப்புக்கான ஓர் செயல்திட்டத்தை உருவாக்கினர்.
- 1945 – இல் யால்டா மாநாட்டில் பாதுகாப்பு சபையில் வாக்களிக்கும் முறை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன.
- 1945 – ஏப்ரல் மாதம் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் இவை தொடர்பான விவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் இறுதி செய்யப்பட்டது.

**45. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.**

- 1956 – இல் எகிப்தின் அரசர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.
- அதுவரை அக்கால்வாய் ஆங்கிலோ–பிரெஞ்சு சூயஸ் கால்வாய் கழகம் எனும் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமாக இருந்தது.
- எனவே இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தது.

**46. நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை ?**

- சீட்டோ ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதிநிதியாக அமைந்ததாகும்.
- பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே இதில் உறுப்பினராக சேர்ந்தன.
- சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது.

**47. கொரியப் போர் (1950 – 53) பற்றி எழுதுக.**

- 1950 ஜூன் 25 – இல் வடகொரியப் படைகள் தென்கொரியாவின் மீது படையெடுத்த போது வெளிப்படையான போர் தொடங்கியது.
- சோவியத் யூனியன் பங்கேற்காத நிலையில் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.
- 1953 ஜூலையில் போர் நிறுத்த உடன்பாடு கையெழுத்தானதோடு இப்போர் முடிவுற்றது

**48. அணிசேரா இயக்கம் (NAM) பற்றி எழுதுக.**

- அணிசேரா எனும் வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியவர் வி.கே.கிருஷ்ணமேனன்.
- இதன் முதல் மாநாடு பெல்கிரேடில் நடைபெற்றது.
- இதன் நோக்கம் "உலக அரசியலில் ஒரு சுதந்திரமான பாதையை உருவாக்குவதாகும்".

**49. ஐரோப்பிய ஒன்றியம் – குறிப்பு வரைக**

- ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தை சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 1991 – டிசம்பரில் மாஸ்ட்ரிக் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.
- இதன் வாயிலாக, 1993 – இல் ஒற்றைச் சந்தையுடன் ஐரோப்பிய ஒன்றியம் நிறுவப்பட்டது.
- ஒன்றிய உறுப்பினர்கள் வெளியுறவுக் கொள்கை, உள்நாட்டு பாதுகாப்பு போன்ற ஏனைய துறைகளிலும் இணைந்து பணியாற்றினர்.

---------



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

**1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர் அது இந்திய சமூகத்தை சீர்த்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்.**

**இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்திய கல்வியின் தாக்கம்**

- ஆங்கிலேயர் தங்கள் நலனுக்காக கற்றறிந்த இந்திய மத்தியதர வர்க்கத்தை உருவாக்கி அதை பாபு வர்க்கமென ஏளனப்படுத்தினர்.
- இருந்தபோதிலும் அந்த வர்க்கத்தினரே இந்தியாவின் புரட்சிகர, முற்போக்கானப் படித்த வர்க்கமாக மாறி நாட்டின் விடுதலைக்காக மக்களைத் திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினர்.

**இந்திய சமூகத்தில் ஏற்படுத்திய சீர்திருத்தம்**

- பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றறிந்த மேலை நாட்டினர் முன்வைத்த சவால்களை எதிர்கொண்டு பதில் கூறினர்.
- இச்சீர்திருத்தவாதிகளால் தூண்டப்பட்ட மீள் சிந்தனையின் விளைவாகவே இந்திய தேசிய உணர்வு உதயமானது.
- சதி ஒழிப்பு, குழந்தைத் திருமண ஒழிப்பு, விதவை மறுமணம் ஆகியவைகளின் மீது இச்சீர்திருத்தவாதிகள் அக்கறை செலுத்தினர்.

**இந்திய சமூகத்தில் மீட்டுருவாக்கம்**

- வில்லியம் ஜோன்ஸ், சார்லஸ் வில்கின்ஸ், மேக்ஸ் முல்லர் போன்ற கீழையுலக அறிஞர்கள் அராபிய, பாரசீக, சமஸ்கிருத மொழிகளிலிருந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனைவருக்கும் கிடைக்கச் செய்தனர்.
- இந்தியாவின் மரபு, புலமை ஆகியவற்றின் செழுமையால் கவரப்பட்டப் பல தொடக்ககால தேசியவாதிகள் இந்தியாவின் பண்டையப் பெருமையை மீட்டெடுக்க ஆர்வத்துடன் வேண்டினர்.

**2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் – பொருளாதாரக் காரணிகளை ஆய்க.**

- இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர்.
- வறட்சி, பஞ்ச காலங்களிலும் நிலவரி பணமாகக் கணக்கிட்டனர்.
- நிலங்கள் விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டது.
- வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டதால், உணவு உற்பத்தி குறைந்தது.
- சந்தைக்குத் தேவையானதை மட்டும் உற்பத்தி செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- ஆங்கில அரசு கட்டுப்பாடற்ற சுதந்திர வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.

**3. இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன ?**

**1857 – இன் பேரெழுச்சி**

- 1857–இன் பேரெழுச்சியே இந்திய தேசிய இயக்கத்தின் பிறந்த நாளாகும்.
- புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர் ஆங்கில ராணுவம் செய்த அட்டூழியங்கள் 'பழி தீர்க்கப்படாமலே' இருந்தன.

**இனப்பாகுபாடு**

- ஆங்கிலேயர் இனப்பாகுபாட்டுக் கொள்கையைப் பின்பற்றினர்.
- அரசு உயர்பதவிகளில் இந்தியர்கள் பணியமர்த்தப்படாமல், திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டனர்.

**இந்தியர்களுக்கு எதிரான அடக்குமுறை**

- இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124A அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டமும்,
- பிராந்திய மொழிச் சட்டமும் (1878) எதிர்ப்புகளைத் தூண்டின.

**இல்பர்ட் மசோதா**

- இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் ஐரோப்பியரின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. காங்கிரஸ் தோற்றம் மற்றும் அகில இந்திய அளவில் மக்களை திரட்டும் தொடக்கமாக செயல்பட்ட விதத்தை எழுதுக.**

**காங்கிரஸ் தோற்றம்**

- இந்திய தேசிய காங்கிரஸ் 1885 டிசம்பர் 28 –இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது.
- A.O. ஹியூம் என்பவர் இவ்வமைப்பை உருவாக்க காரணமாக இருந்தார்.
- W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

**மக்களைத் திரட்டும் செயல்பாடுகள்**

- இவ்வமைப்பு சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் தனது வரம்புக்குள் கொண்டுவரும் பணிகளை மேற்கொண்டது.
- நாட்டின் பல பகுதிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இயக்கங்களுக்கான பொது அரசியல் மேடையாக காங்கிரஸ் செயல்பட்டது.
- அரசியல் செயல்பாட்டாளர்கள் ஒன்றுகூட காங்கிரஸ் இடமளித்தது.
- சிறிய அமைப்பாக இருந்தபோதிலும் அகில இந்திய அளவில் மக்களைத் திரட்டும் தொடக்கமாய் இருந்தது.

**5. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.**

- தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் கவனத்தையும் ஆதரவையும் பெற்றது.
- ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுவது என்பதிலிருந்து, வட்டார மொழியில் சொற்பொழிவு நிகழ்த்துவது என ஏற்பட்ட மாற்றம் இக்காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.
- 1904 – இல் சுப்ரமணிய பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியமர்த்தப்பட்டார்.
- 1906 – இல் வ. உ. சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தினார்.
- 1907 – இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினர்.
- 1908 – இல் கோரல் மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் ஆகியவை வ. உ. சி, மற்றும் சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது.
- வ.உ.சி. மற்றும் சுப்ரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரை நிகழ்த்தினர்.

**6. இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.**

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தினார்.
- 1906 – இல் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
- 1908 – இல் கோரல் மில் தொழிலாளர்கள் பிரச்சனை வ.உ.சியின் கவனத்தை ஈர்த்தது.
- வ.உ.சி. மற்றும் சுப்ரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரை நிகழ்த்தினர்.
- 1908 – இல் வ.உ.சி. மற்றும் சுப்ரமணிய சிவா இருவரும் தேசதுரோகக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.

**7. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.**

- நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.
- மாகாணத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.
- இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்க காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.
- தங்கள் சபையின் தீர்மானங்களின்படி மத்திய, மாகாண அரசுகள் செயல்படவேண்டும்.
- ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.
- இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்கும் விடுதலை இயக்கத்துக்கும் லக்னோ ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

**8. திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.**

**திலகரின் தன்னாட்சி இயக்கம்**

- திலகரின் தன்னாட்சி இயக்கமானது ஏப்ரல் 1916–இல் பெல்காமில் நடந்த மாகாண மாநாட்டில் நிறுவப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகளின் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார்.
- ❖ மகாராஷ்டிரா மற்றும் கர்னாடகாவில் அவரது இயக்கம் பிரபலமடைந்தது.

**அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம்**

- ❖ செப்டம்பர் 1916–ஆம் ஆண்டு மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.
- ❖ இந்தியா முழுவதும் தீவிரப் பயணம் மேற்கொண்டு தன்னாட்சி குறித்த கருத்தை அவர் பரவச்செய்தார்.
- ❖ "இந்தியாவின் விசுவாசத்தின் விலை, இந்தியாவின் விடுதலை" என்று அவர் அறிவித்தார்.

**9. இந்திய தேசிய இயக்கத்தில் லால் – பால் – பால் ஆகிய மூவரின் பங்களிப்பை மதிப்பிடுக.**

**லாலா லஜபதி ராய் (பஞ்சாப்)**

- ❖ சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்கு மிதவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பாருக்கு எதிராக லாலா லஜபதி ராயின் பெயரை தீவிர தேசியவாதிகள் முன்மொழிந்தனர்.
- ❖ இயக்கத்தில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக லாலா லஜபதி ராய் போட்டியிட மறுத்தார்.

**பால கங்காதர திலகர் (மகாராஷ்டிரம்)**

- ❖ ஏப்ரல் 1916–இல் பெல்காமில் நடந்த மாகாண மாநாட்டில் தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார்.
- ❖ தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகளின் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார்.

**பிபின் சந்திர பால் (வங்காளம்)**

- ❖ பிபின் சந்திர பாலின் கருத்துப்படி சுயராஜ்ஜியம் என்பது அந்நியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடைதல் என்பதாகும்.
- ❖ வங்காளத்தில் சுதேசி இயக்கத்தில் பங்கு கொண்டு முக்கிய பங்காற்றினார்.

**10. ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.**

**சூழல்**

- ❖ கிலாபத் மாநாட்டில், காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது.
- ❖ தன்னாட்சி அரசை நிறுவப்படும் வரை இந்த ஒத்துழையாமையைக் கடைபிடிக்க உறுதி ஏற்கப்பட்டது.
- ❖ அரசு வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைப்பது ஆகியன ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்க்கப்பட்டன.
- ❖ வரிகொடா இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் போன்றவற்றை பின்னர் இப்போராட்டத்தில் இணைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

**விளைவுகள்**

- ❖ உள்ளூர் மக்களால் ஆயிரக்கணக்கான பள்ளிகள், நூற்றுக்கணக்கான கல்லூரிகள் மற்றும் வித்யாபீடங்கள் நிறுவப்பட்டன.
- ❖ பல முன்னணி வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலைக் கைவிட்டனர்.
- ❖ 1921 – இல் வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட இந்தியப் பயணமும் புறக்கணிக்கப்பட்டது.
- ❖ நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

**11. ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது ?**

| ஒத்துழையாமை இயக்கம் | சட்டமறுப்பு இயக்கம் |
|---|---|
| ❖ ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை ஆகியவற்றை எதிர்த்து 1920 – இல் தொடங்கப்பட்டது. | ❖ உப்பு மீது விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராக 1930 – இல் தொடங்கப்பட்டது. |
| ❖ சுதேசிப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. | ❖ உப்பு வரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. |
| ❖ சௌரி – சௌரா சம்பவத்தால் திரும்பப் பெறப்பட்டது. | ❖ காந்தி – இர்வின் ஒப்பந்தத்தால் முடித்து வைக்கப்பட்டது. |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**12. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.**

- 1920 – இல் ஒத்துழையாமை இயக்கத்தை இந்து – முஸ்லிம் ஆதரவோடு தொடங்கினார்.
- 1922 – இல் சௌரிசௌரா சம்பவத்தால் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.
- 1930 – இல் உப்பு மீது அரசு வரி விதித்ததை எதிர்த்து சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார்.
- 1931 – இல் காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின்படி, இந்தியர்களை சிறையில் இருந்து விடுவித்தார்.
- 1931 – இல் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் சார்பாக பங்கேற்றார்.
- 1932 – இல் பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் – காந்தி இடையே கையெழுத்தானது.
- 1942 – இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.

**13. டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.**

**கல்விப் பணி**

- எல்பின்ஸ்டன் கல்லூரியில் பட்டம் பெற்ற அம்பேத்கர், பட்டமேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றார். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.
- 1916–இல் மானுடவியல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு 'இந்தியாவின் சாதிகள்' என்ற தலைப்பின் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.
- இந்தக்கட்டுரை பின்னர் 'அரிய இந்தியப் புத்தகம்' என்ற தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டது.

**அம்பேத்கரின் சமூக நீதிக்கான செயல்பாடுகள்**

- மூக் நாயக் என்ற பத்திரிகை தனது கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகவும், பகிஷ்கிரித் ஹிடாகரினி சபை என்ற அமைப்பைத் தனது செயல்பாடுகளுக்காகவும் அவர் தொடங்கினார்.
- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர மஹத் சத்தியாகிரகம் என்ற அமைப்பைத் தொடங்கினார்.
- அனைத்துக் கட்சி மாநாடுகள், சைமன் குழு, வட்டமேசை மாநாடு என அனைத்து இடங்களிலும் தனித் தொகுதிகள் வேண்டும் என்ற கோரிக்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.
- 1932 – ஆம் ஆண்டு காந்தியடிகளுக்கும் அம்பேத்கருக்கும் இடையே பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இதன்படி, இட ஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது.

**14. மாற்றத்தை விரும்புபவர்கள் – மாற்றத்தை விரும்பாதவர்கள் வேறுபடுத்துக.**

| மாற்றத்தை விரும்புபவர்கள் | மாற்றத்தை விரும்பாதவர்கள் |
|---|---|
| ❖ சுயராஜ்ஜியக் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். | ❖ தேர்தல் அரசியல் தேசியவாதிகளின் கவனத்தை திசை திருப்பும் என்றனர். |
| ❖ தீவிர அரசியலில் ஈடுபடவும், சட்டப் பேரவைகளை முடக்கவும் செய்தனர். | ❖ தீண்டாமையை ஒழிப்பது, மது அருந்தாமை, இந்து – முஸ்லிம் ஒற்றுமை, ஆகிய பணிகளில் ஈடுபட்டனர். |
| ❖ சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு மற்றும் சத்தியமூர்த்தி. | ❖ வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் மற்றும் இராஜாஜி. |

**15. பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது ?**

**பகத்சிங்**

- தேசியவாதத்தின் ஓர் ஒப்பற்ற நிலையைப் பகத்சிங் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.
- பஞ்சாப் மாநிலத்திலுள்ள, ஜார்ன்வாலா என்ற இடத்தில் 1907–ஆம் ஆண்டு செப்டம்பர் 28–இல் பிறந்தார்.

**பகத்சிங் குண்டுவீச்சு**

- பகத்சிங் 1929 ஏப்ரல் 8–இல் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசினார்.
- ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான ஒரு போராட்ட நடவடிக்கையாக அது கருதப்பட்டது.

**லாகூர் சதி வழக்கு**

- ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர்.

- சாண்டர்ஸ் கொலை தொடர்பான விசாரணைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர்.
- இந்த வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது.

**பகத்சிங் தூக்கிலிடப்படுதல்**

- லாகூர் சிறைச்சாலையில் 1931, மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- தங்களது இறுதிமூச்சு அடங்கும்வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் 'புரட்சி ஓங்குக' என்று முழங்கியவாறு அவர்கள் தூக்குமரக் கொட்டடியை எதிர்கொண்டனர்.

**16. 1919 – 1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.**

- இந்தியத் தொழில்களின் வளர்ச்சி உலக சராசரியைவிடவும் சிறப்பாக இருந்தது.
- தறிகள் மற்றும் சுழல் அச்சுக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்தது.
- சர்க்கரை உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி ஆகிய இரண்டும் நன்கு வளர்ச்சிபெற்றது.
- போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் கப்பல் தொழிலும் வளர்ச்சி கண்டது.
- சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் (1919) ஏனையவற்றிற்கு முன்னோடியாக இருந்தது.
- இயந்திர உற்பத்தி, விமானம், ரயில் பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி விரிவடைந்தது.

**17. பொருளாதாரப் பெருமந்தத்தின் போது தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சி பற்றி எழுதுக.**

- பெருமந்தத்தால் ஏற்பட்ட நிலத்தின் விலை வீழ்ச்சி, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைத்தனர்.
- குறைந்த வட்டி வீதத்தில் கடன் போன்றவை கோயம்புத்தூரில் ஜவுளித் துறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தன.
- கோயம்புத்தூரில் 29 ஜவுளி ஆலைகள் மற்றும் விதை நீக்கும் தொழிற்சாலைகள் தோன்றின.
- கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரையில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.
- சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 2 லிருந்து 11 ஆக உயர்ந்தது.
- அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள் மற்றும் சினிமா நிறுவனங்கள் எண்ணிக்கை பெருகியது.

**18. பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.**

**இந்துமத மறுமலர்ச்சி**

- ஆரம்பகால தேசியவாதிகள் சிலர் தேசியவாதத்தை இந்துமத அடித்தளத்தில் மட்டுமே உருவாக்க முடியும் என்று நம்பினர்.
- சர்வபள்ளி கோபால் குறிப்பிடுவது போல 1875 – இல் நிறுவப்பட்ட ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது.

**முஸ்லிம் உணர்வின் எழுச்சி**

- சர்வபள்ளி கோபால் குறிப்பிடுவது போல, மறுபுறம் இஸ்லாம் அலிகார் இயக்கத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

**காங்கிரசின் நடவடிக்கைகள்**

- ஆரிய சமாஜம் போன்ற இந்து அமைப்புகளில் நிறைய காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டபோதிலும், காங்கிரஸ் தலைமை சமயசார்பற்றதாகவே இருந்தது.

**சையது அகமது கானின் பங்கு**

- இந்துக்களால் ஆளப்படும் நாட்டில் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு தக்க உதவிகள் கிடைக்காது என்று எண்ணினார்.

**காங்கிரசின் பலவீனக் கொள்கை**

- வங்காளத்தில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என்ற கண்டனத்திற்கு உள்ளாயினர்.
- இத்தகைய வாதங்களை மறுத்து எதிர்வினை ஆற்றாமல் காங்கிரஸ் மௌனம் காத்தது.

**19. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன ?**

- கூட்டு இந்திய அடையாளம் உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாகும்.
- இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை பிரிட்டிஷார் முறியடிக்கத் தொடங்கினர்.
- பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டது.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ பிரிட்டிஷ் அரசு வகுப்புவாத அரசியலுக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை அளித்தது.
- ❖ வட இந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையேயான பகைமை வளர்ந்தது.
- ❖ இந்து – முஸ்லிம் ஒற்றுமை சீர்குலைந்ததால் காங்கிரஸ் தன் வலிமையை இழந்தது.

**20. இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு ?**

**இந்து தேசியம்**

- ❖ இந்துஸ்தானில் உள்ள மக்கள் இந்து பண்பாடு, மொழியை ஏற்றுக்கொள்ள கூறியது.
- ❖ இந்துக்கள் அல்லாதவர்கள் அந்நியர்களாக இருப்பதை நிறுத்திக்கொள்ளக் கூறியது.

**இஸ்லாமிய தேசியம்**

- ❖ 1940 மார்ச் 26 – இல் லாகூரில் கூடிய முஸ்லிம் லீக், தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்மானமாக நிறைவேற்றியது.
- ❖ அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை நிராகரித்து ஆகஸ்ட் 16 – இல் நேரடி நடவடிக்கை நாளில் ஈடுபட்டது.

**இந்திய தேசியம்**

- ❖ பல்வேறு இந்து அமைப்புகளில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டபோதிலும், காங்கிரஸ் சமயசார்பற்றதாகவே இருந்தது.
- ❖ இந்திய தேசிய காங்கிரசின் தேசியவாதத்தை உருவகப்படுத்திய மகாத்மா காந்தி ஆரிய சமாஜமும், அலிகார் இயக்கமும் முன்வைத்த குறுகிய தேசியவாதத்தை மறுத்தார்.
- ❖ பல்வேறு மதங்களுக்கு அப்பாற்பட்ட, ஓர் அரசியல் அடையாளத்தை தோற்றுவிக்க அவர் விரும்பினார்.

**21. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.**

- ❖ 1942 – இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார்.
- ❖ காந்தியடிகள் மக்களை நோக்கி "செய் அல்லது செத்துமடி" என அழைப்பு விடுத்தார்.
- ❖ 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலை காந்தியடிகள் உட்பட பலரை கைது செய்தனர்.
- ❖ கடையடைப்புகள், மறியல்கள், வேலை நிறுத்தங்கள், வன்முறை மோதல்கள் நடந்தன.
- ❖ ஆரம்பத்தில் நகரங்களிலும், இரண்டாம் நிலையில் கிராமங்களிலும் இயக்கம் பரவியது.
- ❖ காவல் நிலையங்கள், இரயில் நிலையங்கள், அஞ்சல் அலுவலகங்கள் ஆகியன சேதப்படுத்தப்பட்டன.
- ❖ 1943 – இல் காந்தியடிகள் 21 நாட்கள் சிறையில் உண்ணாவிரதம் இருந்தார்.
- ❖ 1943 – ஆம் ஆண்டின் முடிவில் 91,836 பேரை கைது செய்தனர், 1060 பேர் பலியாகினர்.

**22. சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது ?**

- ❖ ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் சார்பில் ஆஜராகி வாதாடினார்.
- ❖ இந்திய தேசிய காங்கிரஸ் நேரடியாக மக்களை திரட்டுவதற்காக நாடு முழுவதும் பொது கூட்டங்களை நடத்தியது.
- ❖ இந்திய தேசிய இராணுவத்தின் அதிகாரிகளான ஷா நவாஸ் கான், ஷெகல், G. S. தில்லான் ஆகியோரின் மீது தனி விசாரணையை மேற்கொண்டது.
- ❖ இந்திய நாட்டின் பத்திரிகைகள் இவ்விசாரணையை உணர்ச்சிகரமாக பிரசுரித்தது.
- ❖ இந்திய தேசிய இராணுவ வாரம் கடைபிடிக்கப்பட்ட போது கடையடைப்புகளும், ஊர்வலங்களும் நடந்தேறின.
- ❖ இம்மூன்று அதிகாரிகளை தேர்ந்தெடுத்து விசாரணை செய்ததன் மூலம் அனைத்து அரசியல் கருத்துப் பிரிவினைகளும் ஓரணியின் கீழ் வர வழியேற்பட்டது.
- ❖ இந்திய தேசிய இராணுவத்தின் மீதான விசாரணை பிப்ரவரி 1946 – இல் இந்திய தேசிய இயக்கத்தை மற்றொரு முக்கிய நிகழ்வுக்கு எடுத்துச் செல்ல மேடையமைத்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**23. இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.**

- ❖ இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையில் வாழும் மாவட்டங்களை பிரித்தெடுத்து அங்கு வயது தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றி முடிவை எடுத்தல் வேண்டும்.
- ❖ ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதி செய்யப்பட்டால் அதிமுக்கிய பணிகளான பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவற்றை பொதுவில் செயல்படுத்த ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.
- ❖ எல்லையில் அமையப்பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- ❖ இத்திட்டம் யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்ட பின் செயல்முறைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.
- ❖ 1944–இல் காந்தியடிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், இராஜாஜி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.
- ❖ ஆனால் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

**24. இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது ?**

- ❖ HMIS தல்வார் என்ற போர்க்கப்பலில் B.C. தத் என்பவர் மாலுமியாக பணியாற்றினார்.
- ❖ அக்கப்பலின் பக்கவாட்டில் வெள்ளையனே வெளியேறு என்று எழுதியதற்காக அவர் கைது செய்யப்பட்டார்.
- ❖ இதனையடுத்து அக்கப்பலின் 1100 மாலுமிகள் உடனடியாக போராட்டத்தில் இறங்கினர்.
- ❖ ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும், தரக்குறைவான செயல்பாடுகளையும் கண்டித்தனர்.
- ❖ மாலுமிகள் போராட்டதிற்கு ஆதரவாக பல்வேறு நகரங்களிலிருந்த ராயல் விமானப்படை ஊழியர்களும் ஆர்பாட்டத்தில் இறங்கினர்.
- ❖ இக்கலகத்தை பிரிட்டிஷ் அரசு அடக்குமுறையை வெளிப்படுத்தியே எதிர்கொண்டது.
- ❖ ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தின் கடைசி அத்தியாயமாக இக்கலகம் உள்ளது.

**25. சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன ? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.**

**ஹைதராபாத் இணைப்பு**

- ❖ ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு என்று அறிவித்தார்.
- ❖ ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணிநேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.

**காஷ்மீர் இணைப்பு**

- ❖ காஷ்மீரின் இந்து அரசரான மகாராஜா ஹரிசிங் காஷ்மீர் சுதந்திர அரசாக இருக்குமென்று அறிவித்தபோது அந்நாட்டு மக்கள் தேசிய மாநாட்டுத் தலைமையில் 'காஷ்மீரை விட்டு வெளியேறுங்கள்' என்ற போராட்டத்தை அரசருக்கு எதிராகத் தொடங்கினர்.
- ❖ பாகிஸ்தானியர்கள் நடவடிக்கையைத் தடுக்க முடியாமல், மன்னர் இந்தியாவின் உதவியை நாடினார்
- ❖ காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டதால், காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியானது.

**ஜூனாகத் இணைப்பு**

- ❖ ஜூனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார்.

**26. 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.**

- ❖ 1920 – நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் மொழிவாரி மாகாண கோரிக்கை எழுந்தது.
- ❖ 1946 – இல் பட்டாபி சீத்தாராமையா முதன்முதலாக ஆந்திரா மாநில கோரிக்கையை அரசமைப்பு சபையின் முன் வைத்தார்.
- ❖ 1949 – ஜே.வி.பி.குழு மொழிவாரி மாகாணங்கள் மறுசீரமைப்பை தள்ளிப்போட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- 1952 – இல் பொட்டி ஸ்ரீராமுலு தனி ஆந்திரா கேட்டு உண்ணாவிரதம் இருந்து இறந்தார்.
- 1955 – இல் பசல் அலியை தலைவராகக் கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையம் அறிக்கையை சமர்ப்பித்தது.
- 1956 – இல் மாநில மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு பல மாநிலங்கள் உதயமானது.

**27. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை ? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க –ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.**

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்**

- காலனிய எதிர்ப்பு.
- இனவெறியை எதிர்த்தல்.
- வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை.
- ஆப்பிரிக்க – ஆசிய ஒற்றுமை.
- பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
- உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

**அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க – ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேருவின் பங்கு**

- ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் புதிய நாடுகளை பனிப்போருக்குள் தள்ளும் முயற்சிகளை எதிர்த்தார்.
- 1955 – இல் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாட்டை கூட்டினார்.
- அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவை குறித்து நேரு விளக்கினார்.

**28. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை ?**

- காலனிய எதிர்ப்பு.
- இனவெறியை எதிர்த்தல்.
- வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை.
- ஆப்பிரிக்க – ஆசிய ஒற்றுமை.
- பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
- உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

**29. ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப் படுத்துக.**

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (1980 – 1999)**

- கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இதன்படி, மக்கள் வறுமையிலிருந்து வெளியே வர பசுக்கள் அல்லது ஆடுகள் வழங்கப்பட்டன.
- இத்திட்டத்தில் உதவியைப் பெறும் குடும்பத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு மானியங்களும் மாறுபட்டன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (2005)**

- ஒவ்வொரு ஆண்டும் 100 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வழங்கப்பட்டது.
- இதன்படி, கிராமப்புறங்களில் சாலைகள், கால்வாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் வழங்கப்பட்டன.
- வேலை செய்வோரில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாக இருத்தல் வேண்டும்.

**30. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.**

**(i) எழுத்தறிவு நிலை உயர்வு**

- இந்தியாவில் 1951 – இல் 18.3 விழுக்காட்டிலிருந்த எழுத்தறிவு நிலை 2011 – இல் 74 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- ஆண்களில் 82 விழுக்காட்டினரும், பெண்களில் 65 விழுக்காட்டினரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.

**(ii) கல்வி மையங்கள் அதிகரிப்பு**

- தொடக்கக் கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலான பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது.
- மேற்படிப்பு மையங்களின் எண்ணிக்கை பெருகிற்று.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**(iii) இடைநிற்றல் நீக்கம்**

- இடைநிற்றல் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கத்தினால் அனைவருக்கும் கல்வி திட்டம் (SSA), அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் (RMSA), ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ர சிக்ஷா அபியான்) போன்றவற்றின் மூலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**31. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக**

**முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951 – 56)**

- வேளாண்மையை வளர்ப்பதிலும் குறிப்பாக வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியது.
- பின்னர் தொழிற்துறைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

**இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956 – 61)**

- கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.
- தொழிற்துறையின் பங்கு 24 விழுக்காடாக உயர்ந்தது.

**சாதனைகள்**

- பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்
- தேசிய வருமானத்திலும் தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி.
- தொழிற்சாலைகள் உற்பத்தி அதிகரிப்பு
- வேளாண்மையில் நவீன இடுபொருள்களை பயன்படுத்துவது.

**32. இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.**

- கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.
- புனே தேசிய வேதியியல் ஆய்வகம், புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.
- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் அமைப்பு இயந்திரங்கள், மருந்துகள், விமானங்கள் ஆகியவை குறித்த ஆய்வினை முன்னெடுத்தது.
- வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக் கழகம் ஒருங்கிணைக்கிறது.
- முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது.
- அதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் IIT உருவாக்கப்பட்டன.

**33. இந்தியாவின் ஐந்தாண்டு திட்டங்களைப் பற்றி கூறி, அவற்றின் சாதனைகளைப் பற்றி எழுதுக.**

- ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாக வளர்ச்சிக்குத் திட்டமிடுவதில் இந்தியா சோவியத் யூனியனின் முன்னுதாரணத்தைப் பின்பற்றியது.
- திட்டங்களை வடிவமைப்பதற்காக 1950 – இல் திட்டக்குழு நிறுவப்பெற்றது.
- வேளாண்மை, தொழிலகம், ஆற்றல், சமூகத்துறைகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் முழுமையான பொருளாதார வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.
- 1951 – 56 வரையிலான காலப்பகுதி முதலாவது ஐந்தாண்டு திட்டத்திற்கானது.
- இதுவரையிலும் பன்னிரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறியுள்ளன.

**சாதனைகள்**

- பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்
- தேசிய வருமானத்திலும் தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி.
- தொழிற்சாலைகள் உற்பத்தி அதிகரிப்பு
- வேளாண்மையில் நவீன இடுபொருள்களை பயன்படுத்துவது.

**34. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.**

- இத்தாலிய நகரங்களில் ஒன்றான பிளாரன்ஸ், சக்திவாய்ந்த வர்த்தகக் குடும்பமான மெடிசி குடும்பம் மூலமாக ஆளுமை செய்யப்பட்டது.
- தாந்தே, பெட்ரார்க் என்ற இரண்டு பெரும் இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் உருவாக்கியிருந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தாந்தேயின் 'தெய்வீக இன்பியல்' திகழ்கிறது.
- மனிதநேயவாதிகளுள் முன்னோடியான பெட்ரார்க் 'இத்தாலிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார்.
- ஜியோவனி பொக்காசியோ, 100 கதைகளின் தொகுப்பை டெக்கமரான் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார்.
- நிக்கோலோ மாக்கியவல்லியின் 'தி பிரின்ஸ்' என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது.
- பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட டாவின்சி 'மறுமலர்ச்சிகால மனிதர்' என்று அழைக்கப்பட்டார்.
- வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ், இறுதி விருந்து, மோனலிசா ஆகியன டாவின்சியின் மிகச் சிறப்பான படைப்புகளாகும்.

**35. சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகளை விவரிக்கவும்.**

**ஐரோப்பிய நாடுகளில் பிரிவுகள்**

- தேவாலய நிர்வாகத்தில் ஏற்பட்ட பிளவு அந்த நாட்டின் சமய வழிபாடுகளில் பிரிவுகளை ஏற்படுத்தியது.
- உ.ம். வடஜெர்மனி லூதரன் சபையாகவும், தென் ஜெர்மனி கத்தோலிக்கத்தை தொடர்வதையும் கொண்டன.

**கல்வியறிவு**

- சீர்திருத்த இயக்கத்தின் பல்வேறு சமய போதனைகளை அச்சிட அச்சகம் உதவியது.
- மேலும் பொதுமக்கள் படிப்பறிவு பெற்றனர்.

**பெண்களின் நிலை**

- தேவாலயங்களில் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் பிரட்டஸ்டண்ட் பாதிரியார்கள் திருமணம் செய்துகொண்டனர்.
- இதனால் வீட்டிலும் தேவாலயங்களிலும் பெண்களின் நிலை வலுப்பெற்றது.

**அரசர்களின் அதிகாரம்**

- எட்டாம் ஹென்றி போன்ற சில அரசர்களுக்கு, தேவாலயம் மற்றும் அரசு ஆகிய இரண்டிற்கும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த இந்த சீர்திருத்த இயக்கம் அதிக அதிகாரங்களை வழங்கியது.

**36. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.**

**காரணங்கள்**

- சர்க்கரை வரி ( 1764 )
- முத்திரைச் சட்டம் ( 1765 )
- டவுன்ஷெண்ட் சட்டம் ( 1767 )
- பாஸ்டன் படுகொலை ( 1770 )
- பாஸ்டன் தேநீர் விருந்து ( 1773 )

**போக்கு**

- 1776 – ஜூலை 4 – இல் 13 குடியேற்றங்கள் விடுதலையை அறிவித்தன.
- அமெரிக்கப் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.
- 1777 – இல் சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன் சரணடைய நிர்பந்திக்கப்பட்டார்.
- இறுதியில் 1781 – இல் யார்க்டவுன் என்ற இடத்தில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தன.

**விளைவுகள்**

- இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.
- அமெரிக்காவின் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரித்தது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**37. தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று ? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது ?**

**வணிகப் புரட்சியின் தாக்கம்**

❖ முதலாளிகள் தங்களிடமிருந்த உபரிச் செல்வத்தை முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடினர்.

**காலனி ஆதிக்கம்**

❖ 18–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் நான்கில் ஒரு பகுதி இங்கிலாந்தின் காலனிகளாக இருந்தது.

**மூலதனம்**

❖ காலனிகளின் செல்வங்கள் சுரண்டப்பட்டு இங்கிலாந்திற்கு கொண்டுசெல்லப்பட்டதால், தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய தேவையான மூலதனம் தாராளமாகக் கிடைத்தது.

**மூலவளங்கள்**

❖ நிலக்கரி, இரும்பு போன்ற மூல வளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்ததென்பது தொழில் வளர்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும்.

**அரசியல் உறுதித்தன்மை**

❖ அதன் அரசியல் உறுதித்தன்மை தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.

**நவீன சமூகத்தின் மீது தொழிற்புரட்சியின் தாக்கம்**

❖ தொழிற்புரட்சி, உற்பத்தியில் இருந்த பிரச்சனைகளைத் தீர்த்துவைத்தது.

❖ இயந்திரங்களைப் பயன்படுத்தி பொருளுற்பத்தி செய்வோர்கள் கைவினைத் தொழில்களைப் பாழ்படுத்தினர்.

**38. அமெரிக்க விடுதலைப் போரின் காரணங்களை விவரிக்கவும்.**

**நாவாய் சட்டம்**

❖ நாவாய் சட்டங்கள் எனும் சட்டங்கள் மூலமாக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் அனைத்துப் பொருட்களும் ஆங்கிலக் கப்பல்களின் மூலமாகவே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென கட்டாயப்படுத்தியது.

**சர்க்கரை, சர்க்கரைப்பாகு ஆகியவற்றின் மீது வரிவிதிப்பு (1764)**

❖ 1764–இல் சர்க்கரையின் மீதும் சர்க்கரையின் துணைப் பொருளான சர்க்கரைப் பாகின் மீதும் வரி விதிக்கப்பட்டது.

❖ வட அமெரிக்காவிலிருந்த அனைத்து காலனிகளும் இவ்வரியைச் செலுத்த கட்டாயப்படுத்தப்பட்டன.

**முத்திரைத்தாள் சட்டம் (1765)**

❖ இதன் மூலம் குடியேற்ற நாடுகளின் மக்கள் சட்டத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களிலும் வருவாய் முத்திரைகளை ஒட்டவும் முத்திரைகளைப் பயன்படுத்த வரிசெலுத்தவும் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**டவுன்ஷெண்ட் சட்டம் (1767)**

❖ இங்கிலாந்தின் நிதியமைச்சர் டவுன்ஷெண்ட் என்பவரால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பண்டங்களின் மீது வரிகள் விதிக்கப்பட்டது.

**பாஸ்டன் படுகொலை (1770)**

❖ பாஸ்டன் நகரில் டவுன்ஷெண்ட் சட்டங்களை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது.

❖ பிரிட்டிஷ் வீரர்கள், அமெரிக்கர்களை சுட்டுக் கொன்றனர்.

**பாஸ்டன் தேநீர் விருந்து (1773)**

❖ பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்.

❖ பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**39. பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை விவாதிக்கவும் .**

- பிரெஞ்சு சமுதாயத்தில் பெரும்பகுதியாக இருந்தவர்கள் விவசாயிகளே ஆவர், அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தனர்.
- 1. மதகுருமார்கள், 2. நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள் என சமுதாயம் பிரிவடைந்திருந்தது.
- முதல் இரண்டு பிரிவினரும் பல வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தனர்.
- மூன்றாம் பிரிவைச் சார்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.
- அண்டை நாடான ஆங்கிலப் பேரரசுடன் பிரான்ஸ் தொடர்ந்து போர் மேற்கொண்டதால் அதன் கருவூலத்திற்கு பெருஞ்செலவை ஏற்படுத்தியது.
- பிரெஞ்சு புரட்சிக்கான சமூகத்தை தயார் செய்ததில் அறிவார்ந்த மக்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.

**40. ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது ?**

**பிஸ்மார்க்கின் கொள்கை – இரத்தமும் இரும்பும்**

- பிரஷ்யாவின் பிரதம அமைச்சரான ஆட்டோவான் பிஸ்மார்க் ஜெர்மனிய பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்பதற்காக அவர் 'இரத்தமும் இரும்பும்' என்ற வலுவான கொள்கையைக் கைக்கொண்டார்.

**ஷ்லெஸ்விக் – ஹால்ஸ்டின் சிக்கல் (1864)**

- இவ்விரு பகுதிகளும் டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் இருந்த இரு ஜெர்மானிய மாநிலங்களாகும்.
- 1864 – இல் பிஸ்மார்க், ஆஸ்திரியாவுடன் இணைந்து டென்மார்க்கை தோற்கடித்தார்.
- வியன்னா உடன்படிக்கையின்படி, டென்மார்க் அவ்விரு பகுதிகளையும் பிரஷ்யா–ஆஸ்திரியா வசம் ஒப்படைத்தது.

**ஆஸ்திரியப் – பிரஷ்யப் போர் (1866)**

- பிஸ்மார்க் தனது இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் பிரஷ்யாவைத் தாக்க ஆஸ்திரியாவைத் தூண்டும் செயல்களில் ஈடுபட்டார்.
- பிரஷ்யா, ஆஸ்திரியாவை பொஹிமியாவிலுள்ள சடோவா அல்லது கொனிக்ராட்ஸ் போரில் தோற்கடித்தது.
- இதனால் வடக்கில் அமையப்பெற்றிருந்த நாடுகள் யாவும் பிரஷ்யாவின் தலைமையில் வடக்கு ஜெர்மானியக் கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டன.

**எம்ஸ் தந்தி**

- பிஸ்மார்க் தெற்கு ஜெர்மானிய மாகாணங்களை ஒன்றிணைக்கும் பொருட்டு பிரஷ்யாவிற்கும், பிரான்சிற்குமிடையே பிளவை ஏற்படுத்த தனது கவனத்தைச் செலுத்தினார்.
- பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சரான கிரமாண்ட், பிரஷ்ய மன்னரை எம்ஸ் நகரில் சந்தித்த நிகழ்வு குறித்து மன்னர், பிஸ்மார்க்கிற்கு தந்தி ஒன்றை அனுப்பினார்.
- அத்தந்தியை இருநாடுகளுக்கும் போர் ஏற்படும் வகையில் மாற்றியமைத்தார்.

**பிராங்கோ – பிரஷ்யப் போர் (1870 – 71)**

- பிரான்ஸ் நாடானது பிரஷ்யா மீது போர்ப் பிரகடனம் செய்தது.
- செடானில் நடந்த போரில் (1870 செப்டம்பர் 2) பிரான்ஸ் தோல்வியடைந்தது .
- பிரெஞ்சு மன்னரான மூன்றாம் நெப்போலியன் சரணடைந்தார்.

**ஜெர்மானிய ஒருங்கிணைப்பு**

- வெர்செய்ல்ஸ் அரண்மனையில் பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியம் வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பிற்கும், தெற்கத்திய ஜெர்மானிய மாகாணங்களுக்கும் மன்னராக அறிவிக்கப்பட்டார்.
- இவ்வாறு இராஜதந்திர உத்திகளையும், போர் நடவடிக்கைகளையும் கொண்டு ஜெர்மானிய ஒருங்கிணைவு சாத்தியப்படுத்தப்பட்டது.

**41. ஆறு சரத்துக்களைக் கொண்ட 1838 – ஆம் ஆண்டின் மக்களின் பட்டயத்தைப் பற்றி எழுதுக.**

- அனைவருக்கும் வாக்குரிமை
- வாக்குச் சீட்டுகள் மூலம் வாக்களித்தல்
- வேட்பாளர்களுக்கு சொத்து தகுதியை நீக்குதல்
- ஏழைகள் தேர்தலில் போட்டியிடுவதற்காக நிதி சலுகைகளை வழங்குதல்.
- சம அளவிலான பிரதிநிதிகளை வழங்குதல்
- வருடாந்திரப் பாராளுமன்றம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**42. முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.**

**காரணங்கள்**

**கூட்டணி முறையின் பரிணாமம்**

- பிஸ்மார்க், 1882 – இல் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளை இணைத்து 'மூவர் கூட்டணியை' உருவாக்கினார்.
- ஜெர்மனியின் இந்நிகழ்வுக்கு பதிலடியாக பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் ஒரு அணியாக திரண்டு 'முக்கூட்டு நட்பு' உருவாக்கப்பட்டது.

**மொராக்கோ சிக்கல்**

- மொராக்கோ சிக்கலில் பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராக பிரான்சை ஆதரித்தது.

**போஸ்னிய சிக்கல்**

- ஆஸ்திரிய–ஹங்கேரி, போஸ்னியாவையும் ஹெர்ஸிகோவினாவையும் 1908 –இல் இணைப்பதாக அறிவித்ததால் தொடர் சிக்கல்கள் தோன்றின.

**பால்கன் சிக்கல்**

- பால்கன் போர்களில், பல்கேரியர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்து அதற்காக செர்பியர்களை பழிவாங்கத் துடித்தனர்.

**உடனடிக் காரணம் – ஆர்ச் டியூக் ஃபிரான்ஸ் ஃபெர்டினாண்ட் படுகொலை**

- ஆஸ்திரிய–ஹங்கேரியின் வாரிசும், ஆர்ச்டியூக் அந்தஸ்தில் இருந்தவருமான ஃபிரான்ஸ் ஃபெர்டினாண்ட் 1914 ஜூன் 28, அன்று போஸ்னியாவில் மாணவராக இருந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

**விளைவுகள்**

- 1919 – இல் பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது.
- ஜெர்மன் அரசு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- உலக அமைதியை பாதுகாக்க பன்னாட்டு சங்கம் நிறுவப்பட்டது.

**43. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது – இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.**

**வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்**

- முதல் உலகப் போரின் முடிவில் அமைதி உடன்படிக்கை 1919 ஜூன் 28 அன்று வெர்செய்ல்சில் உள்ள கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது.

**அமைதி உடன்படிக்கையின் நியாயமற்றத் தன்மை**

- முதல் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- அதன் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது.
- அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக்கொடுக்கவும், சார் பள்ளத்தாக்கில் பிரான்ஸ் படைகளை நிறுத்தவும் ஜெர்மனி நிர்பந்திக்கப்பட்டது.
- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியாவை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது.
- சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியா, ஜெர்மனியோடு இணைந்தால் பிரான்சு நாட்டிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் அது ஜெர்மனியிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டது.

**44. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளை விவரிக்கவும்.**

- அல்சேசையும், லொரைனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்.
- சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட வேண்டும்.
- பிரிந்து கிடந்த போலந்து மாகாணங்களை ஒன்றிணைத்து அதனை பன்னாட்டு சபையின் கட்டுப்பாட்டில் விடுக்க வேண்டும்.
- ஜெர்மனி வைத்திருந்த பகுதிகள் யாவையும் தோழமை நாடுகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஜெர்மனிக்கு படைகளைக் குவிக்க தடை விதிக்கப்பட்டது.
- ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போரில் விளைந்த இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் பொறுப்பெனக் கொள்ளப்பட்டது.

**45. முதல் உலகப் போரின் காரணங்களை எழுதவும்.**

**கூட்டணி முறையின் பரிணாமம்**

- பிஸ்மார்க், 1882 – இல் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளை இணைத்து 'மூவர் கூட்டணியை' உருவாக்கினார்.
- ஜெர்மனியின் இந்நிகழ்வுக்கு பதிலடியாக பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் ஒரு அணியாக திரண்டு 'முக்கூட்டு நட்பு' உருவாக்கப்பட்டது.

**மொராக்கோ சிக்கல்**

- மொராக்கோ சிக்கலில் பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராக பிரான்சை ஆதரித்தது.

**போஸ்னிய சிக்கல்**

- ஆஸ்திரிய–ஹங்கேரி, போஸ்னியாவையும் ஹெர்ஸிகோவினாவையும் 1908 –இல் இணைப்பதாக அறிவித்ததால் தொடர் சிக்கல்கள் தோன்றின.

**பால்கன் போர்கள்**

- பால்கன் போர்களில் பல்கேரியர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்து அதற்காக செர்பியர்களை பழிவாங்கத் துடித்தனர்.

**உடனடிக் காரணம்**

- ஆஸ்திரிய–ஹங்கேரியின் வாரிசும், ஆர்ச்டியூக் அந்தஸ்தில் இருந்தவருமான ஃபிரான்ஸ் ஃபெர்டினாண்ட் 1914 ஜூன் 28 அன்று போஸ்னியாவில் மாணவராக இருந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

**46. பன்னாட்டு சங்கத்தின் வெற்றி, தோல்விகளை ஆய்க.**

**பன்னாட்டு சங்கத்தின் வெற்றிகள்**

**(i) ஆலந்து தீவுகள் பிரச்சனை தீர்வு**

- ஆலந்து தீவுகளின் இறையாண்மை மீது ஸ்வீடனும், பின்லாந்தும் 1920 – இல் உரிமைகோரி சர்ச்சையைக் கிளப்பியன.
- சங்கம் அத்தீவு பின்லாந்தையே சென்றுசேர நெறி ஏற்படுத்தியது.

**(ii) மேல்புற சைலேசியா சிக்கல் தீர்வு**

- 1921 – இல் மேல்புற சைலேசியாவை முன்னிறுத்தி போலந்தும், ஜெர்மனியும் சர்ச்சையைக் கிளப்பியபோது சங்கம் அதில் தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது.

**(iii) கிரீஸ் பல்கேரியா பிரச்சனை தீர்வு**

- 1925 – ஆம் ஆண்டு கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்தபோது சங்கம் போர் நிறுத்த ஆணையை வெளியிட்டு ஆக்கிரமிப்பை நிறுத்தியது.

**பன்னாட்டு சங்கத்தின் தோல்விகள்**

- ஐரோப்பிய இராஜதந்திரத்தின் மையமாக இது விளங்கியது.
- இதற்கென்று தனி இராணுவ அமைப்பு இல்லாதது.
- இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் சங்கத்தின் கட்டளைக்கு பணிய மறுத்தன.
- பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஆதிக்கம்.
- அமெரிக்க ஐக்கிய நாடு இதில் உறுப்பினராகவில்லை.

**47. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.**

- முதல் உலகப் போர் முடிவில் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி மீது கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக்கொடுக்கவும், சார் பள்ளத்தாக்கில் பிரான்ஸ் படைகளை நிறுத்தவும் ஜெர்மனி நிர்பந்திக்கப்பட்டது.
- ஜெர்மனியிடம் இருந்த காலனிய நாடுகள் பறிக்கப்பட்டு, படையளவு குறைக்கப்பட்டது.
- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேஷியா போலந்திடம் ஒப்படைக்கப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்கு என்ன அலை ஏற்பட்டது.
- ❖ இதன் தொடர்ச்சியாக ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழி வகுத்தது.
- ❖ டால்மேஷியாவை யுகோஸ்லோவியாவிடம் கொடுத்ததால் இத்தாலி பாதிப்பு அடைந்தது.

**48. இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமாவார்கள் என்பதை ஆய்ந்து கூறுக.**

**ஸார் இணைப்பு**

- ❖ வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி, ஜனவரி 1935–இல் ஸார் பகுதியில் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.
- ❖ வாக்களித்தவர்களில் தொண்ணூறு சதவீத நபர்கள் ஜெர்மனியோடு இணைவதையே விரும்பினார்கள்.

**ரைன்லாந்து இணைப்பு**

- ❖ வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் ஜெர்மனி தனது இராணுவத்தை ரைன்லாந்தில் இருந்து விலக்கிக் கொள்ள ஒப்புக்கொண்டதையும் மீறி 1936–இல் ஹிட்லர் மீண்டும் அப்பகுதியில் இராணுவத்தைக் குவிக்கலானார்.

**ஆஸ்திரியா இணைப்பு**

- ❖ ஆஸ்திரிய பிரதம அமைச்சரிடம் தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்து ஆஸ்திரியாவை வலுகட்டாயமாக இணைத்துக் கொண்டார்.

**சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு**

- ❖ சூடட்டன்லாந்தில் வாழும் ஜெர்மானியர்கள் மிக மோசமாக ஒடுக்கப்படுகிறார்கள் என்பது போன்றதொரு பிரச்சாரத்தை பரப்பி பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னரே ஹிட்லர் அப்பகுதியைத் தனது இராணுவத்தைக் கொண்டு ஆக்கிரமித்தார்.

**மூனிச் ஒப்பந்தம்**

- ❖ மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் கூடிப்பேசி ஹிட்லர் அக்டோபர் 1 – இல் நிர்பந்தித்தது போல சூடட்டன்லாந்தை ஜெர்மானிய படைகள் ஆக்கிரமித்துக் கொள்ள அனுமதித்தனர்.
- ❖ இரண்டாம் உலகப் போர் ஹிட்லரின் போரே. அவரே திட்டமிட்டார், துவங்கினார், இறுதியாக இழக்கவும் செய்தார்.

**49. இரண்டாம் உலகப் போருக்கான காரணங்களை விவாதிக்கவும்.**

**அமைதி உடன்படிக்கையின் நியாயமற்ற தன்மை**

- ❖ முதல் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.

**பன்னாட்டு சங்கத்தின் தோல்வி**

- ❖ மற்றொரு போரைத் தவிர்க்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட பன்னாட்டு சங்கம் காலப்போக்கில் வெற்றி பெற்றவர்களின் கூட்டணி அமைப்பானது..

**1930 – களில் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தம்**

- ❖ இரண்டாம் உலகப்போர் துவங்க முக்கியமான பொருளாதார காரணம் பெருமந்தமே ஆகும்.
- ❖ பெருமந்தம் பொருளாதார தேசியவுணர்வை அதிகப்படுத்தியது.

**ஜெர்மானிய பெரு வியாபாரிகளின் எதிர்பார்ப்பும் தேசப்பற்றாளர்களின் மனக்குறையும்**

- ❖ ஐரோப்பிய கண்டத்தில் பெரும் தொழிற்தேசமான ஜெர்மனியோ காலனிகள் ஏதும் கொண்டிருக்கவில்லை.
- ❖ இதுவே ஜெர்மனியின் பெருவியாபார அமைப்புகளை, வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகளை உடைக்கத் தூண்டுவதாக அமைந்தது.

**முசோலினியின் விரிவாக்கக் கொள்கை**

- ❖ இராணுவ அரசின் முதலாளித்துவமாக பொருளாதாரத்தை கட்டமைத்த இத்தாலி, ஆயுதம் தாங்கிய விரிவாக்கத்தை ஆதரித்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**ஜப்பானின் ஏகாதிபத்தியக் கொள்கை**

- ❖ ஜெர்மனியின் அணுகுமுறையை கிழக்கு ஆசியாவில் ஜப்பான் பின்பற்றியது.
- ❖ ஜப்பான் ஏற்கெனவே தைவானையும், கொரியாவையும் காலனிகளாக உருவாக்கிக் கொண்டதோடு மஞ்சூரியாவையும் கட்டுப்படுத்தியது.

**போர் உருவானதில் ஹிட்லரின் பங்கு**

- ❖ ஹிட்லர், ஸார் பகுதியை ஜெர்மனியோடு இணைத்தார்.
- ❖ ரைன்லாந்து பகுதியை இணைத்துக் கொண்டார்.
- ❖ ஆஸ்திரியாவை வலுக்கட்டாயமாக ஜெர்மனியுடன் இணைத்தார்.
- ❖ சூடட்டன்லாந்து பகுதியையும் ஆக்கிரமித்தார்.
- ❖ இவ்வாறான ஆக்கிரமிப்பு செயல் மூலம் ஹிட்லர் இரண்டாம் உலகப் போர் ஏற்படக் காரணமானார்.

**50. முதல் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டு எழுதுக.**

**ஒற்றுமைகள்**

- ❖ இரண்டு உலகப் போர்களிலும் ஜெர்மனி தோல்வியை சந்தித்தது.
- ❖ மில்லியன் கணக்கான மக்கள் பலியாயினர்.
- ❖ இரண்டு உலகப் போர்களிலும் அமெரிக்கா சில ஆண்டுகள் கழித்தே இறங்கியது.

**வேற்றுமைகள்**

- ❖ முதல் உலகப்போரில் நேச நாடுகள் அணியில் இருந்த ஜப்பானும், இத்தாலியும் இரண்டாம் உலகப்போரில் அச்சு நாடுகள் அணியில் இருந்து போரிட்டது.
- ❖ முதல் உலகப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்பட்ட பன்னாட்டு சங்கம் தோல்வியடைந்தது.
- ❖ இரண்டாம் உலப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்பட்ட ஐ.நா.சபை இன்றளவும் வெற்றிகரமாக செயல்படுகிறது.

**51. அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.**

- ❖ அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- ❖ அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- ❖ அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- ❖ அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- ❖ ஒரு நாடு மற்ற நாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக்கூடாது.
- ❖ அனைத்துப் பன்னாட்டு பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்படவேண்டும்.
- ❖ பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- ❖ நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

**52. அரபு – இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967 – இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.**

**பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது**

- ❖ இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் யூதர்கள் தங்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தாயகம் வேண்டுமெனக் கோரினர்.
- ❖ அரேபியர்களின் எதிப்பை மீறி 1947–மே மாதம் ஐ.நா.சபையின் தீர்மானத்தின் மூலம் பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது.

**இஸ்ரேல் சுதந்திர நாடாக அறிவிப்பு**

- ❖ பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கிலப் படைகள் வெளியேறிய பின்னர் மே 15, 1948 – இல் இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது.

**ஐ.நா. சபையின் ஈடுபாடு**

- ❖ போரில் அகதிகளான பாலஸ்தீனியர்களுக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும், ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு பெறவும் உரிமை உண்டென ஐ.நா. சபையின் பொதுக்குழு உறுதிசெய்து தீர்மானம் நிறைவேற்றியது.

**அமெரிக்க போர் தளவாடங்கள் உதவி**

- 1966 – வாக்கில் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்கத்தொடங்கியது.
- அதன் விளைவாக பனிப்போர் மத்திய கிழக்கில் பாதம் பதித்தது.

**இஸ்ரேல் – எகிப்து போர்**

- மே 23, 1967– இல் எகிப்து, டைரன் கடலிடுக்கு வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணப்படுவதற்குத் தடை விதித்தது.
- ஜூன் மாதத் தொடக்கத்தில் இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது.

**53. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள பிரச்சினைகளில் ஐ. நா. சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது. பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாக இக்கூற்றை விளக்கமாக எடுத்துரைக்கவும்.**

**பாலஸ்தீன பிரச்சனை**

- பாலஸ்தீனத்தில், அராபியர்கள் 85 விழுக்காட்டு நிலப்பகுதிகளையும், யூதர்கள் 5.8 விழுக்காட்டு நிலப்பகுதிகளையும் சொந்தமாகக் கொண்டிருந்தனர்.
- இவ்வுண்மைகளைப் பொருட்படுத்தாது, பாலஸ்தீனம் இருநாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும், பெரும்பான்மை அராபியர்கள், யூதர்கள் குடியேறுவதற்கான நிலங்களை ஒப்படைக்க வேண்டுமெனவும் ஐ. நா. சபையின் சிறப்புக்குழு பரிந்துரை செய்தது.

**தேசிய சீனாவை அங்கீகரித்தல்**

- பாதுகாப்பு சபையில் இடம் பெற்றுள்ள தேசிய சீனாவின் பிரதிநிதி அகற்றப்பட்டு அவ்விடத்தில் கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதிநிதி அமர்த்தப்பட வேண்டுமென சோவியத் யூனியன் கோரிக்கை வைத்தது.
- கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சோவியத் ரஷ்யா, பாதுகாப்பு சபையையும் ஐ. நா. சபையின் ஏனைய அமைப்புகளையும் புறக்கணிக்க முடிவு செய்தது.
- முடிவில் 1971 – இல் சீன மக்கள் குடியரசு ஐ. நா. வின் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினரானது.

**கொரியப் போர்கள்**

- அமெரிக்காவின் முன்முயற்சியில், பொது சபை கூடி, அமைதிக்காக ஒன்றுபடுகிறோம் என்ற சமாதானத் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இத்தீர்மானம் சட்டத்திற்கு புறம்பானது என சோவியத் ரஷ்யா நினைத்தது.

**சூயஸ் கால்வாய் பிரச்சனை**

- 1956 நவம்பர் 5 –இல் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் படைகள் எகிப்தின் துறைமுக நகரமான செய்த்தில் இறங்கின.
- இப்பிரச்சனை பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.
- ஆனால், பிரிட்டனும் பிரான்சும் மறுப்பாணையைப் பயன்படுத்தி தீர்மானத்தைத் தடுத்தன.

**ஹங்கேரி சிக்கல்**

- ஹங்கேரிக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கைகளை ஐ.நா. சபை தனது செல்வாக்கால் கட்டுப்படுத்த முடியாமல் போனது.
- ஒரு வலிமை மிகுந்த நாடு ஐ. நா. சபையை மீறி செயல்படுவதில் உறுதியாக இருந்தால் ஐ. நா. சபையால் எதையும் செய்யவியலாது என்பதை இந்நிகழ்வு உணர்த்தியது.

**54. போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும்.**

- 1961 – இல் யெல்ட்சின் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார்.
- 1968 – இல் யெல்ட்சின் கட்சியின் முழுநேர ஊழியரானார்.
- 1985 – இல் மாஸ்கோ கட்சி அமைப்பின் ஊழல்களைக் களைய தேர்வானார்.
- 1986 – இல் யெல்ட்சின் சோவியத் யூனியனின் உயர்மட்ட கொள்கைமுடிவு செய்யும் அமைப்பான பொலிட்பீரோவின் உறுப்பினராக உயர்த்தப்பட்டார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- கட்சி கூட்டங்கள், சீர்திருத்தப் பணிகள் மெதுவாக நடைபெறுவதாக விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார்.
- 1989 – இல் சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெற்றார்.
- 1990 – மே 29 இல் கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம், யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது
- 1991 – இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், யெல்ட்சின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.

**55. உலகளாவிய பிரச்சனைகளை தீர்ப்பதில் ஐ. நா. சபையின் பங்கு பற்றி எழுதுக.**

**பாலஸ்தீன பிரச்சனை**

- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் யூதர்கள் தங்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தாயகம் வேண்டுமெனக் கோரினர்.
- அரேபியர்களின் எதிப்பை மீறி 1947–மே மாதம் ஐ.நா.சபையின் தீர்மானத்தின் மூலம் பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது.

**தேசிய சீனாவை அங்கீகரித்தல்**

- 1949 – இல் சீனாவின் முதன்மை நிலப்பகுதியில் மா சே துங் கம்யூனிச அரசை உருவாக்கினார்.
- அச்சூழலில் அங்கிருந்து பார்மோசா தீவுக்குத் தப்பிச்சென்ற சியாங் – கே – ஷேக், பார்மோசாவில் தேசிய சீன அரசை உருவாக்கி தலைமை ஏற்றார்.
- 1971 – இல் சீன மக்கள் குடியரசு ஐ. நா. வின் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினரானது.

**கொரிய சிக்கல் (1950 – 53)**

- 1950 ஜூன் 25 – இல் வடகொரியாப் படைகள் தென்கொரியாவின் மீது படையெடுத்தபோது வெளிப்படையான போர் தொடங்கியது.
- பொது சபை அவசரமாகக் கூடி, அமைதிக்காக ஒன்றுபடுகிறோம் என்ற சமாதானத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

**சூயஸ் கால்வாய் சிக்கல் (1956)**

- பொது சபை அமெரிக்காவின் முன்முயற்சியில் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டி எகிப்தின் மீதான இஸ்ரேலின் படையெடுப்பைக் கண்டனம் செய்தது.
- இதனால் இஸ்ரேல், கிரேட் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்தின.

**அரபு – இஸ்ரேல் போர்**

- ஐ.நா. சபையின் பொதுக் குழு 1947 – 48 போரில் அகதிகளான பாலஸ்தீனியர்களுக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும், ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு பெறவும் உரிமை உண்டென மீண்டும் உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றியது. இதனால் போரும் முடிவுக்கு வந்தது.

----------



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## வரைபட வினாக்கள்

1. இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
   (i) கான்பூர் (ii) அகமதாபாத் (iii) பம்பாய் (iv) சென்னை (v) லாகூர்
2. இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
   (i) கல்கத்தா (ii) நாக்பூர் (iii) டெல்லி (iv) தூத்துக்குடி (v) காஷ்மீர்
3. இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
   (i) மீரட் (ii) லக்னோ (iii) கான்பூர் (iv) சம்பரான் (v) பூனா
4. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
   (i) தண்டி (ii) பம்பாய் (iii) பூனா (iv) மீரட் (v) சென்னை
5. உலக புற எல்லை **வரைபடத்தில் வாஸ்கோடகாமா சென்ற கடல் வழியை** வரைந்து, அதில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும். (i) போர்த்துக்கல் (ii) நன்னம்பிக்கை முனை (iii) கோழிக்கோடு
6. உலக வரைபடத்தில் **மெகல்லன் சென்ற கடல்வழித் தடத்தை** வரைந்து பின்வரும் இடங்களை குறிக்கவும்.
   (i) மெகல்லன் ஜலசந்தி (ii) பிலிப்பைன்ஸ் தீவுகள்

----------

## காலக்கோடு வினாக்கள்

1. 1915 முதல் 1930 வரையிலான இந்தியா விடுதலை இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.
2. 1900 முதல் 1950 வரைக்கான காலக்கோடு வரைந்து **காந்தியடிகளின் சகாப்தம்** குறித்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை குறிக்கவும்
3. 1920 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.
4. 1900 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.
5. 1930 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.
6. 1900 முதல் 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.
7. அமெரிக்க விடுதலைப் போரின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு காட்டி வரைக.

----------------------------------------

முயற்சிகள் தவறலாம் ! முயற்சிக்க தவறலாமா ?

தேர்வில் வெற்றிபெற வாழ்த்துக்கள்

**Effort Never Dies**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com